பக்கங்கள்: பதினாறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 25 ஞாயிற்றுக்கிழமை (12-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:318

### யாழ். நோக்கி வந்த இராணுவ பவள் ஓட்டோவை மோதியது:

# பொதுமக்கள்-படையினர் இடையே அரியாலையில் நேற்றுக் களேபரம்!

## 10 நாள்களில் இவ்வாறான 3ஆவது சம்பவம் கண்காணிப்புக் குழு வாகனம் நொறுக்கப்பட்டது



ஆயுததாரிகளாக கொட்டன்களுடன் பொதுமக்களைத் தாக்கத் தயாராக நிற்கும் இராணுவத்தினர்....
(படம் : அலுவலகப் பட்டப்பிடிப்பாளர்)

யாழ்ப்பாணம்,ஒக்.12

**கண்டி வீதியில் அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் நேற்று மாலை இராணுவத்தினரின் பவள் கவச வாகனம் ஒன்று வீதியில் பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோவை மோதியதில் ஒருவர் காயமடைந்தார். ஓட்டோ மிக மோசமாக சேதமடைந்தது. இந்த விபத்தைத் தொடர்ந்து அங்கு கூடிய பொதுமக்களுக்கும் இராணுவத்தினர் மற்றும் பொலீஸாருக்கும் இடையே பெரும் களேபரம் ஏற்பட்டது.**

**ஆத்திரமடைந்த பொதுமக்கள் படையினரை நோக்கி கலவிச்சில் ஈடுபட்டனர். அவர்களைக் கலைப்பதற்காக பொலீஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசினர். படையினர் கொட்டன்களால் பொதுமக்களை துரத்தித் துரத்தித் தாக்கினர். இதில் ஏழு பேர் காயமடைந்தனர். இந்தக் களேபரங்களுக்கு மத்தியில் அப்பகுதியிலுள்ள மாணவன் ஒருவனைக் காணவில்லை என்றும் கூறப்படுகின்றது.**

**கடந்த பத்து நாள்களில் யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரின் வாகனங்களால் ஏற்படும் விபத்துக்களைத் தொடர்ந்து பொதுமக்கள் தாக்கப்பட்ட மூன்றாவது சம்பவம் இதுவாகும்.**

நேற்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி வீதி வழியாக நாவற்குழி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓட்டோவை எதிரே வந்த பவள் கவச வாகனம் திடீரென மோதியது. தனது பாதையை விட்டு விலகி ஓட்டோ பயணித்துக்கொண்டிருந்த பகுதிக்குள் புகுந்து பவள் அதனை மோதியுள்ளது.

இதனால் ஓட்டோ மிகமோசமாகச் சேதமடைந்தது. அதன் சாரதி வெளியே பாய்ந்து தப்பிவிட அதில் பயணித்துக்கொண்டிருந்த கொழும்புத்துறையைச் சேர்ந்த ம.மகேஸ்வரன் (வயது 40) என்பவர் படுகாயமடைந்தார். அவரது வலது கால் முறிந்துள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (16ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் மீதும் படையினர் பாய்ச்சல்!

### ஒருவர் வைத்தியசாலையில்; பலருக்கு உட்காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

கண்டி வீதியில் அரியாலை மாம்பழம் சந்தியருகே நேற்றுமாலை இடம்பெற்ற விபத்து தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற யாழ். குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் மற்றும் புகைப்படப் பிடிப்பாளர்கள் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதனால் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவம் வேண்டுமென்றே பொதுமக்களை சீண்டிக் கோபமூட்டி அமைதியைக் குலைக்கிறது

### புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.12

அரியாலை மாம்பழம் சந்திப் பகுதியில் இராணுவ கவசவாகனம் - ஓட்டோவை மோதிய சம்பவத்தையும் கடந்த வாரங்களில் இடம்பெற்ற விபத்துக்களையும் பார்க்கும்போது இராணுவத்தினர் வேண்டுமென்றே மக்களைச் சீண்டி கோபமூட்டி அமைதியைக் குழப்பும் முயற்சியில் இறங்குவதாகவே கருதவேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நேற்றிரவு அவர்களது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்திய சமயம் கையளித்த முறைப்பாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர் தாக்கப்பட்டதை கண்டித்து இன்று மறியல்!

யாழ்ப்பாணம்,ஒக்.12

அரியாலை, மாம்பழம் சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தையடுத்துப் படையினரால் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து இன்று காலை 10 மணிக்கு கோயில் வீதியில் உள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக மறியல் போராட்டம் இடம்பெறவுள்ளது.

'உதயன்', 'யாழ்.தினக்குரல்', 'வலம்புரி' பத்திரிகைகளின் செய்தியாளர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்கள், விபத்து தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்ற சமயம் படையினரால் தாக்கப்பட்டிருந்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## போதனா வைத்தியசாலையின் சுகாதார நிலைமை படுமோசம்

### மருத்துவபீட விரிவுரையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ். போதனா வைத்தியசாலையின சுகாதார நிலைமைகள் தற்போது படுமோசமான நிலையில் உள்ளன.

- இப்படி அதிர்ச்சித் தகவல் ஒன்றை வெளியிட்டார் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் வருகை விரிவுரையாளரும் உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகருமான டாக்டர் என்.சிவராஜா.

2004ஆம் ஆண்டில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மீள்குடியமர்வு, புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பாகவும் மனிதாபிமான உதவிகள் தொடர்பாகவும் ஆராயும் பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று யாழ். செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே டாக்டர் என். சிவராஜா, யாழ். போதனா வைத்தியசாலையின் சுகாதார நிலைமைகளைக் கடுமையாகச் சாடினார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய வெளிவிவகார அமைச்சரின் தலைவர் பிரபாவுடனான சந்திப்பு ரத்து

### தமிழ்ச்செல்வன் தாயகம் திரும்பாததால் இந்த முடிவு

கிளிநொச்சி,ஒக்.12

எதிர்வரும் 14ஆம் திகதி முதல் மூன்று நாள் விஜயத்தை இலங்கையில் மேற்கொள்ளும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்திக்கமாட்டார் எனத் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

அயர்லாந்து சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று வன்னி திரும்புவதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், திடீரென அவர் டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளுக்குச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. 16ஆம் திகதிக்குப் பின்னரே அவர் வன்னி திரும்ப இருக்கின்றார்.

இதன் காரணமாக கனேடிய வெளிவிவகார அமைச்சருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறமாட்டாது எனத் தற்போது தெரிவிக்கப்படுகின்றது. (15ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## தலை ஒட்டிப் பிறந்த
# எகிப்திய சிறுவர்களைப் பிரிக்கும் சத்திர சிகிச்சை நேற்று ஆரம்பம்




நியூயோர்க்,ஒக்.12

எகிப்தைச் சேர்ந்த ஒட்டிப் பிறந்த இரு குழந்தைகளைப் பிரிக்கும் சிக்கலான சத்திரசிகிச்சை நேற்று அமெரிக்காவில் ஆரம்பமானது.

மொஹமட் மற்றும் அஹமட் இப்ராஹிம் ஆகிய இரு சிறுவர்களும் தலை ஒட்டிப் பிறந்துள்ளனர். இருவருக்கும் தனித்தனி மூளை இருக்கின்றது. ஆனால், முக்கிய நரம்புகள் ஒன்றாகவே இருக்கின்றன.

இதனால் இவர்களைப் பிரிக்கும் சத்திரசிகிச்சை அவர்களின் மரணத்தில்கூட முடியலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.



இரு சிறுவர்களது தலைகளும் ஒட்டியிருப்பதால் அவ்கள் விழிகளை மூடுவதற்கும் கழுத்தை அசைப்பதற்கும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் ஒட்டியபடியே இருந்தால் அவர்களது வாழ்நாள் பூராகவும் மருத்துவச் சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும்.

தலை ஒட்டிப் பிறந்தவர்களைப் பிரிக்கும் சத்திர சிகிச்சையில் மிக ஆபத்தான இரண்டாவது சிகிச்சை இதுவாகும். இவ்வாறு தலை ஒட்டிப் பிறந்த ஈரானிய சகோதரிகள் இருவரை பிரிப்பதற்கு சிங்கப்பூரில் கடந்த ஜூலை மாதம் நடந்த சத்திர சிகிச்சையின் போது சகோதரிகள் இருவரும் உயிரிழந்தனர். உலகம் முழுவதும் அவர்களுக்காக அனுதாபந் தெரிவித்தது.

**சிறுவர்களின் நரம்புகளின் இணைப்பு**




தற்போதும் அத்தகைய ஒரு ஆபத்தான சத்திரசிகிச்சையையே அமெரிக்க மருத்துவர்களும் மேற்கொண்டுள்ளனர். இதிலும் அவர்கள் வெற்றி பெறுவது 50 சதவீதமே சாத்தியமானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர்கள் இருவரும் வெற்றிகரமாகப் பிரிக்கப்பட்டால் அவர்கள் பின்னர் சுலபமாக சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பி விடலாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த எகிப்திய சிறுவர்களின் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்று உலகெங்கும் பிராத்தனைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

# ஆப்கானில் சிறையுடைத்து 40 தலிபான்கள் தப்பினர்

காபூல்,ஒக்.12

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் உள்ள சிறைச்சாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தலிபான் கைதிகள் 40 பேர் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். அவர்களைத் தேடும் பணியில் உள்ளூர் படையினரும் அங்கு தங்கியுள்ள பன்னாட்டுப் படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

கந்தகாரில் உள்ள அந்தச் சிறைச்சாலை வெள்ளிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு கைதிகள் தப்பினர் என்று கூறப்படுகின்றது. ஆனால், நேற்று சனிக்கிழமையன்றே சிறை உடைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப் பட்டது.

சிறையில் இருந்து எத்தனை கைதிகள் தப்பினார்கள் என்று உடனடியாக அதிகாரிகளால் கூறமுடியவில்லை. எனினும் தப்பியோரில் 40 பேர்வரையானோர் தலிபான்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

"கடந்த இரவில் தலிபான் கைதிகளில் ஒரு தொகுதியனரும் அரசியல் கைதிகள் பலரும் தப்பிச் சென்றுள்ளனர். ஆனால், அவர்களின் எண்ணிக்கை என்ன என்று சரியாக உடன் தெரியவில்லை" - என்று நேற்றுக் காலை செய்தியாளர்களிடம் பேசிய சிறைச்சாலை அதிகாரிகள் கூறினர்.

பாதுகாப்பு உளவுத் தகவல்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்ட 'கிரிமினல்'களே இந்தச சிறைச்சாலையில் பெரும் எண்ணிக்கையில் அடைக்கப்பட்டிருந்தனர் என்று ஆப்கான் இராணுவப் பேச்சாளர் ஜெனரல் அப்துல் வேஸ் தெரிவித்தார்.

இந்த சிறையுடைப்புக் குறித்து பொலீஸார் தனியான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார். (ம)



ஈராக்கில் அமெரிக்கப் படையினர்

# பொலீஸ் - இடதுசாரித் தீவிரவாதிகள் சண்டையில் நேபாளத்தில் 38பேர் பலி!


நேபாளத்தின் மேற்குப் பகுதி நகர் ஒன்றில் இடதுசாரித் தீவிரவாதிகளுக்கும் பொலீஸாருக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற மோதலில் குறைந்தது 38 பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். இதன் மூலம் 9 நாள்களாகத் தொடர்ந்து வந்த போர் நிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்துள்ளது.

மேற்கு நகரான டங்கில் உள்ள பொலீஸ் நிலை ஒன்றை தீவிரவாதிகள் தாக்க முயன்ற சமயம் மோதல் வெடித்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். இந்த மோதலில் குறைந்தது 35 இடதுசாரித் தீவிரவாதிகளும் 3 பொலீஸாரும் கொல்லப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

வெள்ளிக்கிழமை பின்னிரவில் இருதரப்பினருக்கும் இடையிலான துப்பாக்கிச் சண்டை ஆரம்பமானது. அது நேற்று சனிக்கிழமை காலை வரை தொடர்ந்து நடந்தது.

இந்துப் பண்டிகையை ஒட்டி தீவிரவாதிகளால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போர் நிறுத்த ஒப்பந்தம் இதனால் முடிவுக்கு வந்தது. இந்தப் போர் நிறுத்த அறிவிப்பு மூலம் அங்கு வன்முறைகள் நிறுத்தப்படவில்லை. வியாழனன்று பொலீஸாருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற வேறொரு மோதலில் 8 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இடதுசாரித் தீவிரவாதிகள் 1996 இல் உள்நாட்டுப் போரை ஆரம்பித்த பின்னர் இதுவரை அங்கு சுமார் 8 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.




ரோந்து சுற்றும் நேபாளப் பொலீஸார்.

# நன்கொடையாளர் மாநாட்டுக்கு முன்பு ஈராக் பற்றிய புதிய தீர்மானம் வேண்டும்

## ஐ.நா.செயலாளர் கோபி அனான் வலியுறுத்து

நியூயோர்க்.ஒக்.12

மெக்சிக்கோவில் நடைபெறவுள்ள நன்கொடையாளர்கள் மாநாட்டுக்கு முன்பாக ஈராக் குறித்த புதிய தீர்மானத்துக்கு ஒப்புதல் வழங்கினால் மிகவும் வசதியாக இருக்கும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

நன்கொடையாளர் மாநாடு எதிர்வரும் 23 மற்றும் 24 ஆம் திகதிகளில ஸ்பெயின் தலைநகர் மட்ரிட்டில் நடக்கிறது.

ஈராக் குறித்த புதிய தீர்மானத்தை நிறைவேற்றத் தவறினால் நன்கொடையாளர்கள் மாநாடு ஒத்திவைக்கப்படுமா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு 'இது குறித்து பேச்சு நடைபெற்று வருகிறது. இந்த விவகாரத்தில் நான் முழு ஆவலுடன் ஈடுபட்டுள்ளேன்' -என்றார்.

இன்றைய தினம் வரை மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் மாநாட்டை ஒத்திவைப்பதற்கான எந்த ஒரு முடிவையும் அதன் அமைப்பாளர்கள் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மாநாட்டையும், புதிய தீர்மான விவகாரத்தையும் பெரும்பாலானோர் ஒன்றாக இணைத்துப் பார்க்கின்றனர். மாநாட்டுக்கு முன்பாகவே ஈராக் குறித்த புதிய தீர்மானம் ஏற்படுவதையே ஒவ்வொருவரும் விரும்புவர் என்றும் அவர் சொன்னார்.

ஸ்பெயின் மற்றும் பிரிட்டிஸ் ஆதரவுடன் அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மானம் ஐ.நா.பாதுகாப்புச் சபையின் விவாதத்தில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

ஈராக் குறித்த புதிய தீர்மானம் வாபஸ் பெறப்படலாம் எனக் கூறப்படுகிறது என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு இந்த விவகாரம் குறித்து பாதுகாப்புச் சபையில் உள்ள உறுப்பு நாடுகள் மிக மிகத் தீவிரமாக விவாதித்து வருகின்றன. இது மிகவும் சிக்கலான மற்றும் தீவிரமான விவகாரம். இதில் நாம் அவசரம் காட்டத் தேவையில்லை. அவசியமான முடிவே நமக்கு தற்போது தேவை என்றார். (ம)

## பொய் கூறுவதில் வல்லவரான புஷ்

வாஷிங்ரன்,ஒக்.12

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் போட்டியிடப் போகிறார். சமீபத்தில் நடந்த கலிபோர்னிய மாகாண ஆளுநர் தேர்தலில் அவரது குடியரசு கட்சி வேட்பாளர் நடிகர் ஆர்னோல்ட் வெற்றி பெற்றுள்ளது மூலம் புஷ்ஷுக்கு இன்னும் செல்வாக்கு இருப்பதை வெளிப்படுத்தினாலும் அமெரிக்காவில் வெளிவருகின்ற சில புத்தகங்கள் அவரது செல்வாக்கை குறைத்து வருகின்றன.

'ஜோர்ஜ் புஷ்ஷும் அவர் கூறிய பொய்களும்' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் வெளிவந்திருக்கிறது. 'மிகப் பெரிய பொய்' என்ற இன்னொரு புத்தகமும் ஜோர்ஜ் புஷ்ஷின் புளுகு மூட்டைகளை சுட்டிக் காட்டுகின்றது. இதேபோல் இன்னும் ஏராளமான எழுத்தாளர்கள் ஜோர்ஜ் புஷ் பற்றி புத்தகங்கள் எழுதி இருக்கிறார்கள்.

எல்லாமே ஜோர்ஜ் புஷ் பொய் கூறுவதில் வல்லவர் என்றும் மக்களை ஏமாற்றுபவர் என்றும் வர்ணிக்கின்றன. ஏதாவது ஒரு பொய்யை சொல்லித்தான் புஷ் இந்த குற்றச்சாட்டுகளை முறியடிக்க வேண்டும்.

# பலஸ்தீனர்களின் வீடுகளை இடித்தழிக்கின்றது இஸ்ரேல்

மேற்குக் கரையின் றபா அகதிகள் முகாமில் உள்ள பலஸ்தீனர்களின் 10 வீடுகளை நேற்று இஸ்ரேலியப் படையினர் தகர்த்தழித்தனர். ஆயுதக் கடத்தலைக் கண்டுபிடிக்கும் இராணுவ நடவடிக்கை என்று கூறிக்கொண்டு அவர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டதாக பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

காஸா பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினர் கடந்த வியாழக்கிழமை இரவு முதல் ஹெலிகள், டாங்கிகள் சகிதம் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையில் நேற்று ஒரு பலஸ்தீனர் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது வெள்ளிக்கிழமையன்று இரு சிறுவர்கள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர். 50க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.



காயமடைந்த பலஸ்தீனர்

நேற்று றபா முகாமில் நடத்தப்பட்ட தேடுதலின்போது தாம் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றைக் கண்டுபிடித்ததாக இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்தனர். ஆனால், அவர்கள் கூறியது போன்று ஆயுதங்கள் எவற்றையும் அவர்கள் முகாமில் இருந்து கண்டெடுக்கவில்லை.

எகிப்தில் இருந்து பலஸ்தீனர்கள் கடத்தி வரும் ஏவுகணைகள் மற்றும் டாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் என்பவற்றை தீவிரவாதிகள் இந்த முகாமில் மறைத்து வைக்கிறார்கள் என்று இஸ்ரேல் கூறுகின்றது. இஸ்ரேலின் இந்த இராணுவ நடவடிக்கையின்போது அப்பாவி பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதற்கு ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். (ம)

# ஏழு கிலோ ஹெரோயின் சிக்கியது மதுரையில் 2 ஈழத்தமிழர்கள் கைது!

மதுரை.ஒக்.12

இலங்கைக்குக் கடத்துவதற்காக வைத்திருந்த ரூ14கோடி பெறுமதியுள்ள ஹெரோயின் போதைப்பொருள் மதுரையில் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

மதுரை மாவட்டம், சோழவந்தானில் தங்கிருந்து சிலர் இலங்கைக்குப் போதைப்பொருள் கடத்துவதாக சென்னையில் உள்ள மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதன்பேரில் கடந்த மாதம் பொலீஸார் சோழவந்தானுக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபட்டனர். உடனே அந்த இருவரும் அங்கிருந்து தப்பி மதுரை வந்தனர். அவர்கள் ஒரு வாடகை வீட்டில் தங்கியிருப்பது பொலீஸாருக்குத் தெரியவந்தது.

இதையடுத்து, பொலீஸார் அந்த வீட்டுக்கு வெள்ளிக்கிழமை சென்று சோதனையிட்டு, 7கிலோ நிறையுள்ள ரூ7 கோடி சர்வதேச மதிப்புள்ள ஹெரோயின் போதைப் பொருளைக் கைப்பற்றினர்.

இது தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த இராமகிருஷ்ணன் (43), இவரது சகோதரர் ராமர் (30) ஆகியோரைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் மத்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலீஸார் மதுரை 4ஆவது நீதித்துறை நடுவர் பாலசுப்பிரமணியம் முன் சனிக்கிழமை ஆஜர்படுத்தினர். அந்த இருவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இருவரும் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

# ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கல்

**இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் பத்திரிகையா ளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு ஒன்றை இன்று பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடத்துகின்றது.**

**இந்த விருது வழங்கும் விழாவில் தேசிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் விருதுக்கு தெரிவுசெய்யப்பட்டோரின் விவரங்கள் இங்கே பிரசுரமாகின்றன.**

## எஸ்.நடராசா
### (பிரதம ஆசிரியர், வீரகேசரி)



இவர் 1956 நவம்பரில் வீரகேசரி நிறுவனத்தில் விளம்பர மொழிபெயர்ப்பாளராக இணைந்தார். 1960 இல் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பின்னர் வீரகேசரி யாழ். கிளை முகாமையாளராகவும், உதவி விநியோக முகாமை யாளராகவும் கடமையாற்றினார். 1966இல் மீண்டும் வீரகேசரி உதவி ஆசிரியராக பணியாற்ற ஆரம்பித்தார். 1984இல் செய்தி ஆசிரியரா னார். 1997இல் வீரகேசரியின் பிரதம ஆசிரியரானார்.

இவர் வீரகேசரி என்ற நிறுவனத்தில் 47வருடங்களாக தொடர்ச்சி யாக பணியாற்றி வருகிறார். வாயாடி என்ற பெயரில் சந்தியில் என்ற பத்தியை வீரகேசரியில் எழுதிவரும் இவர் மித்திரன் தினசரியாக வெளிவந்த காலத்தில் ராஜம் என்ற பெயரில் நகைச்சுவைக் கட்டுரை களையும், எஸ்.என்.ஆர்.என்ற பெயரில் அக்காலத்தில் பரபரப்பாக பேசப்பட்ட கொலை வழக்குகளையும் சுவையாக எழுதினார்.

கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் இணைந்ததன் பின்னர் அங்கு நடைபெற்ற உலக ஊடகவியலாளர் மாநாட்டிற்கும் 1981இல் இந்தியாவில் நடைபெற்ற உலக தமிழாராட்சி மாநாட்டிற்கும் சிறப்பு செய்தியாளராக சென்றிருந்தார்.

## செல்வி சற்சொரூபவதி நாதன்
### (சிரேஷ்ட ஒலிபரப்பாளர்)



1965இல் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்சேவையில் அறிவிப்பாளராகி பின்னர் முதலாம்தர செய்தி வாசிப்பாளராக நீண்ட காலம் பணியாற்றிவர். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் தமிழ்சேவை, ஆங்கில சேவை, கல்விச்சேவை, செய்திப்பிரிவு என்று பல்வேறு துறைகளிலும் பொறுப்பான பதவிகளை வகித்தவர். ஆங்கில சேவையில் நிகழ்ச்சி கட்டுப்பாட்டாளராக கடமையாற்றிய பெருமை இவருக்கு உண்டு. தொடர்ந்து 38ஆண்டுகளாக செய்தி வாசிக்கும் ஒரே ஒரு தமிழ் ஒலிபரப்பாளர் இவராவார். இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்திலும் சுயாதீன தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சிகளை வழங்கிவருபவர். விஞ்ஞான பட்டதாரியான இவர் மலேசியாவில் ஒலிபரப்பு பயிற்சியை மேற்கொண்டவர்.

## வீரகத்தி தனபாலசிங்கம்
### (செய்தி ஆசிரியர், தினக்குரல்)



1977இல் ஒப்புநோக்காளராக வீரகேசரியில் சேர்ந்து தனது பத்திரிகை வாழ்க்கையை ஆரம்பித்தவர். 1985இல் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் உதவி ஆசிரியரானார். வெளிநாட்டு செய்திகளை கையாண்டு வந்த இவர் 1988 தொடக்கம் 1994வரை நாடாளுமன்ற செய்தியாளராக பணியாற்றினார். வெளிநாட்டு, உள்நாட்டு அரசியல் கட்டுரைகளை புனைபெயரில் எழுதி வந்தார். வீரகேசரி ஆசிரியபீடத் தில் 13வருடங்கள் பணியாற்றிய பின்னர் தினக்குரல் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் செய்தி ஆசிரியராக பதவி ஏற்று இன்றுவரை பணி யாற்றி வருகிறார். கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், பருத்தித்துறை ஹாட் லிக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

## பொன்னையா ஜெயராஜ்
### (பிரதம ஆசிரியர், ஈழநாதம்)



1990 ஈழமுரசு பத்திரிகையில் பத்திரிகைத் தொழிலை ஆரம் பித்தார். பின்னர் யாழ்ப்பாணத்தில் ஈழநாதம் பத்திரிகை ஆரம்பித்த போது அதில் சேர்ந்து கொண்டார். பின்னர் சிலமாதங்களில் பிரதம ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் வன்னியில் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட மக்க ளுக்கு தகவல்களை வழங்கும் ஒரே ஒரு அச்சு ஊடகமாக ஈழநாதம் திகழ்ந்தது. யாழ்ப்பாணத்திலிருந்தும், வன்னியிலிருந்தும் ஈழநாதம் தினசரிப் பத்திரிகையை கிரமமாக வெளிக்கொண்டு வருவதற்கு தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர்.

யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறை சிறப்புப்பட்டதாரியான இவர் பின்னர் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பரமேஸ்வராக் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார்.

## இராசையா செல்வராஜா
### (பிரதம செய்தி ஆசிரியர்,சக்தி எவ்.எம்.)



1973இல் லேக்கவுஸ் பத்திரிகையின் அவிசாவளை நிருபராக பத்திரிகைதுறை வாழ்க்கையை ஆரம்பித்த இவர் 1977இல் தினபதி அலுவலக செய்தியாளரானார். 1987இல் தினபதியின் பதில் செய்தி யாசிரியராக பதவி உயர்வு பெற்றார். 1990இல் தினபதி நிறுவனம் மூடப்பட்டதையடுத்து இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன செய்திப் பிரிவில் கடமையாற்றினார். இருமாதங்களின் பின் வீரகேசரி ஆசிரிய பீடத்தில் இணைந்து கொண்டார். வீரகேசரியில் பாதுகாப்பு நிலவரங் கள் குறித்த பல கட்டுரைகளையும் எழுதி வந்தார். 1998இல் மகா ராசா -கூட்டுநிறுவனத்தின் சக்தி எட்.எம். செய்திப் பிரிவின் பிரதம செய்தியாசிரியராக நியமிக்கப்பட்டார்.

## சின்னத்துரை தில்லைநாதன்
### (யாழ். மாவட்டம்)




யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையின் நெல்லியடி செய்தியாளராக 1970 ஆம் ஆண்டு சேர்ந்துகொண்ட இவர், 1972ஆம் ஆண்டு வீரகேசரியின் புலோலி நிருபராக நியமனம் பெற்றார். அக்காலப்பகுதியில் வீரகேசரியின் வயதில் குறைந்த நிருபராக இவரே விளங்கினார். 1987 இல் இவர் பருத்தித்துறை, உடுப்பிட்டி தொகுதிகளை உள்ளடக்கிய வடமராட்சி நிருபராக வீரகேசரி நியமித்தது. விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலத்திலும் இடப்பெயர்வுகள், அனர்த்தங்கள் நிகழ்ந்த காலகட்டத்திலும் இவர் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து செய்தி களை அனுப்பிக்கொண்டிருந்தார். இலங்கை - இந்திய படை களாலும் அரசியல்வாதிகளாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊடக வியலாளர் என்ற வகையில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகங் கொடுத்தாலும் அதற்கு அஞ்சி ஒதுங்கிவிடாது தொடர்ந்து பணியாற்றிவருகிறார். தற்போது வீரகேசரி, சக்தி எப்.எம்., உதயன் ஆகியவற்றின் செய்தியாளராக உள்ளார்.

## தம்பு விவேகராசா
### (வன்னி மாவட்டம்)



யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையின் வவுனியா நிருபராக 1978 இல் தனது பத்திரிகைத் தொழிலை ஆரம் பித்தார். அதன் பின்னர் உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களின் வவுனியா செய்தியாளராக பணியாற்றிவருகிறார். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என பல துறைகளிலும் பணியாற்றிவருகிறார். யுத்த சூழ்நிலையிலேயே இவரது நீண்டகால பணி அமைந்திருந் தது. தேர்தல் காலகட்டங்களில் எந்த கட்சிகளுக்கும் சார்பின்றி சமநிலையான செய்திகளை வழங்கிவந்தார். இவர், ஊடகத்துறை தொடர்பான பயிற்சி பெற்ற பட்டதாரி. 1989இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையத் தின் வவுனியா மாவட்ட இணைப்பாளராகக் கடமையாற்றினார்.

## காத்தமுத்து இரத்தினலிங்கம்
### (திருகோணமலை மாவட்டம்)



1977இல் வீரகேசரி நிருபராக பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்த இவர், 26 வருடங்களாக பணியாற்றிவருகிறார். பி.பி.ஸி. தமிழோசை உட்பட வெளிநாட்டு வானொலி தொலைக்காட்சிகளுக்கும் அவ்வப்போது செய்திகளை வழங்கிவந்திருக்கிறார். கட்டுரைகள், சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ளார். மித்திரன் வாரமலரில் இவரின் இரு தொடர் நாவல்கள் பிரசுரமாகியுள்ளன. இளம் தலை முறையினர் மத்தியில் ஊடகத்துறை அறிவை வளர்க்கும் முகமாக திருகோணமலையில் பத்திரிகைத்துறை வழிகாட்டி நிலையத்தை ஆரம்பித்து இலவசமாக நடத்திவருகின்றார். இவர் பத்திரிகைத்துறை டிப்ளோமா பட்டம் பெற்றவராவார்.

## இராசநாயகம் உதயகுமார்
### (மட்டக்களப்பு மாவட்டம்)



பாடசாலை மாணவப் பருவத்திலேயே சுதந்திரன் பத்திரிகைக்கு எழுத ஆரம்பித்த இவர், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு பத்திரிகையின் மட்டக்களப்பு செய்தியாளராக, 1977 இல் நியமனம் பெற்றார். இதனையடுத்து உள்ளூர் சர்வதேச ஊடகங்களுக்கு மட்டக் களப்பு செய்தியாளராக கடமையாற்றிவருகிறார். 1990இல் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த காலத்தில் செய்தியாளன் என்ற வகையில் ஏற்பட்ட நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள் காரணமாக ஐரோப்பிய நாடு ஒன்றிற்குச் சென்று வாழ்ந்த இவர், அங்கு வெளியான பத்திரிகைகளில் உதயசாரதி என்ற பெயரில் எழுதி வந்தார். அதன் பின்னர் மீண்டும் நாடு திரும்பிய இவர், பி.பி.ஸியின் மட்டக்களப்பு செய்தியாளராகப் பணியாற்றி வருகிறார்.

## ஏ.எல்.எம்.சலீம்
### (அம்பாறை மாவட்டம்)



1966 இல் பத்திரிகைத் தொழிலை ஆரம்பித்தார். இலங்கையின் முன்னணி தமிழ் தினசரிகள், வானொலிகளின் செய்தியாளராகப் பணியாற்றிவரும் இவர், சிறந்த சமூக சேவையாளராவார்.

தினபதி, பாசறையில் படம்போடப்பட்ட பத்திரிகையாளர்களில் இவரும் ஒருவர். பல சமூகங்கள் வாழும் அம்பாறை மாவட்டத்தில் எந்த அரசியல் கட்சிகள் குழுக்களின் பக்கமும் சாராது நடு நிலையாக நின்று செய்திகளை எழுதிவரும் செய்தியாளர் என்ற பெருமை இவரையே சாரும். இதனால் இவர்மீது ஆசிரிய பீடத்தில் உள்ளவர்களும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவரும் நன்மதிப்பைக் கொண்டிருக்கின்றனர்.

36 வருடங்களாக முழுநேர பத்திரிகையாளராக இருந்து தனது பணியைச் சிறப்பாக செய்திருக்கிறார்.

## பழனி தங்கவேல்
### (மலையகம்)



பத்திரிகைத் துறையில் 33 வருட அனுபவத்தைக் கொண்ட இவர், வீரகேசரியில் 23 வருடங்களாக பிராந்திய செய்தியாளராகப் பணியாற்றி வருகிறார். மலையக மக்களின் அரசியல் சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவந்ததில் இவருக்கு பெரும் பங்குண்டு. கவிதைத் துறையில் ஈடுபாடுகொண்ட இவரின் கவிதை கள் விழப்பு என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. இக்கவிதைகள் சிங்கள, ஆங்கில யூகோஸ்லோவிய மொழிகளிலும் மொழிபெயர்க் கப்பட்டு வெளிவந்துள்ளன.




நேயமற்ற எதிர்காலச் சமுதாயம் படைத்திட......

அரும்புகளுக்கு உதவுவீர்!

கணக்கு இல:5-21-2022431-4

(இலங்கை வங்கி, மேற்றரக்கிளை)

அரும்புகள்

சிறுவர் நிதியம்

யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியம்

021-222-2134

:0777-678051

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள **4S Champion - Bajah** மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- புஸ்பா, 192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(கல்வி நிறுவனம் முன்பாக) (23528)

57 தொடரிலக்க நல்ல நிலையிலான கயஸ் வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி க.இராஜரட்ணம், 418, நாவலர் வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். (23529)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு இல. 83, செம்மணி வீதியிலுள்ள 8 பரப்புக்காணி (தென்னைப் பிரயோசனங்களுடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு பொ.பரமநாதன் 269, ஆ.வ.வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (23506)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

சுத்தமான **Dobermann Pinscher, Great Dane** நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (23539)

## திருமண சேவை

1974, புநர்பூசம், செவ்வாய்7, பாவம்17, **France** மணமகனுக்கு அழகான, மெல்லிய மணப்பெண் தேவை. விரைவில் வரவுள்ளார். உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு தொடர்புகொள்க: துரை விமலா, நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். (23496)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: K.சிவரஞ்சன் (ரஞ்சன்), சிவன்கோவிலடி, சாவகச்சேரி. (23490)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பறஞ்சன், பொற்பதி றோட், கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (23521)

தரமான **Broiler** இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. ஒரு கிலோ **140/=** சுத்தம் செய்யப்பட்டது ஒரு கிலோ **230/=** தொடர்பு:- திரு. சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (23549)

**Prima, Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். **(Electronic** நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(23538)

புறொயிலர் **1Kg-140/=** சுத்தம் செய்தல் இலவசம். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் லயன் பொம்மேரியன் நாய்க்குட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு:- மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (23447)

## பணிப்பெண்

எமது வீட்டுக்கு நோயாளியைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை தகுந்த வேதனமும் உணவும இருப்பிட வசதியும் உண்டு. நல்லொழுக்கம் நிறைந்தவர் நற்சான்றிதழுடன் நேரில வரவும். தொடர்பு: நா.ரகுமார், 11, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (23540)

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதி, உப்புமடப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கில் சகலவசதிகளுடனும் வீடு, 5 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. (வீடு, காணி பிரித்தும் கொடுக்கப்படும்) தொடர்பு: 071 234 7564. (23537)

கொழும்புத்துறை வீதியில் சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கையில் 1½ பரப்புக் காணியுடன் கட்டி முடிக்கப்படாத மேல்மாடி வீடு, நல்ல தண்ணீக் கிணற்றுடன் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: **T.P. 021-222-5486, 64/1,** பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். (23551)

கஸ்தூரியார் வீதியில் 1½ பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: **195B,** கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (23556)

## வீடு வாடகைக்கு தேவை

கணனி பயிற்சி, கணனி விற்பனை நிலையம் நடத்துவதற்கு மாநகர சபை எல்லைக்குள் வாகனம் நிறுத்துவதற்கும் வகுப்புகள் நடத்துவதற்கும் பொருத்தமான இடவசதியுள்ள வீடு வாடகைக்குத் தேவை. விள.இல. 2068, மே/பா உதயன். (C/30658)

**யாழ்-கொழும்பு போக்குவரத்து சேவை**

தினசரி யாழ்-கொழும்பு பயணிகள் வான் சேவையும் (பயணிகள் கட்டணம் 900/=) லொறியில் பொருட்கள் அனுப்பும் சேவைகளை நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஒழுங்குபடுத்தலாம்

ஜெயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்

| | |
|---|---|
| கொடிகாமம் வீதி, நெல்லியடி | கொட்டாஞ்சேனை கொழும்பு - 13 |
| 021-226-3500 | 01-2478444 |
| 0777-271478 | 01-2478443 |

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்தாபனத்துக்கு கேற், கிறில் வெல்டிங் வேலை தெரிந்தவர்களும் பழக விரும்புபவர்களும் உடன் தேவை.

நேரில் வரவும்.

**தக்ஷிகா வெல்டிங் வேக்ஸ்,**
இல.208, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (21-14-13) (23499)

## விற்பனைக்கு

ஏழாலை மேற்கு, கேணியடியில் மில் வீதியில் உள்ள 41/2 பரப்பு காணியும் வீடும் உடன் விற்பனைக்குள்ளது.

தொடர்பு:
செ.உதயசூரியன்
அனுரா வீடியோ
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
**T.P.: 0777 552540**
(சி.30655) (24-21-13-14)

## வீடு விற்பனைக்கு

Sea Street, Negombo (நீர்கொழும்பு) என்ற முகவரியில் உள்ள, மூன்று அறைகளுடன் கூடிய, மேல்மாடி கட்டடக்கூடிய, 7 பேச்சில் அமைந்த வீடு, விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
0602212572,
0127159151
(23492) (21-14-13)

## கல் உடைக்கும் ஆலை உரிமையாளர்களே!

★கல் உடைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள், சன்பாவோ (Shanbao)

★டபுல் ரிங் ஜோ பிளேட்ஸ் (Double Ring Saw Plates)

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

**D.L.R. லங்கா (பி) லிமிட்டட்**
622/2, அளிசாவளை வீதி,
கடுவெலை.
தொலைபேசி: 074 412335. 01 2579272
(21-14-13)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**உயர்திரு. த.மகாசிவம்**

அவர்கள் சார்க் நாடுகளின் ஆசிரியர் சங்கங்களின் தலைவராகத் தெரிவாகியமையையிட்டு பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

இ.வல்லிபுரம்
ஓய்வுபெற்ற அதிபர்.

மானிப்பாய். (சி.30656) (24-21-14-13)

## ஆங்கில ஆசிரியர்கள் தேவை

வடமராட்சியிலும், யாழ்.நகரிலும் சிறார்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க ஆங்கில ஆசிரியர்கள் தேவை.

- ✳ **ஆங்கிலத்தில் சிறார்களுக்கு கணனி கற்பிக்கும் ஆசிரியர்கள்.**
- ✳ **பாலர் பாடசாலை ஆசிரியர்கள்**

ஆங்கிலத்தில் பாலர் பாடசாலையை நடத்தக்கூடிய பாலர் பாடசாலை ஆசிரியர்கள் தேவை. அனுபவம் இல்லாவிட்டாலும் ஆங்கிலத்தில் கற்பிக்கும் திறனுடைய பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

**BRITISH BUSINESS SCHOOL**
**140, Temple Rd., Jaffna.**
T.P.222 5796.
(23452) (26-21-14-13)

## கள உத்தியோகத்தர் (FIELD OFFICER) தேவை

விவசாயப் பொருள்களை சந்தைப்படுத்தும் நிறுவனத்திற்கு மேற்படி பதவிக்கு விவசாயப் பட்டதாரிகள் அல்லது டிப்ளோமாதாரிகள் தேவை.

விண்ணப்பதாரிகள் **Pass port** அளவு புகைப்படம், தே.அ.அ. பிரதி, பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ் பிரதி என்பவற்றை கொண்ட சுயவிவரக்கோவையுடனும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்துடனும் எதிர்வரும் **14/10/2003** செவ்வாய்க்கு முன்னர் நேரடியாகவோ, தபால்மூலமாகவோ விண்ணப்பிக்கவும்.

## மல்ரி பிளெக்ஸ் MULTIPLEX

இயற்கை உர வகைகள்,
இயற்கைக்கிருமி நாசினிகள், விதைகள்
என்பவற்றின் வடமாகாண ஏக
விநியோகஸ்தர்கள் :

**எம்.எஸ். அன் கோ**

235.237, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 2506
மேலதிக விவரங்கள் தேவைப்படின்: 0777- 849852

யாழ்ப்பாணத்தில் மல்ரி பிளெக்ஸ் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு உப முகவர்கள் வேண்டப்படுகின்றனர்.
(23555) (11-18)

---

ஸ்ரீராம ஜெயம்

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

ஆதிமூல லக்ஷ்மி நாராயண அமுதசுரபி
(கந்கோவள ஈசானமடம்)

மேற்படி அமுதசுரபியில் 10-10-2003 வெள்ளிக்கிழமை அன்று இடம்பெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

| | இல. |
|---|---|
| முதலாம் பரிசு | 4595 |
| இரண்டாம் பரிசு | 764 |
| மூன்றாம் பரிசு | 5653 |

ஆறுதல்பரிசுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | 1195 | 6. | 5044 |
| 2. | 3474 | 7. | 5610 |
| 3. | 1364 | 8. | 2509 |
| 4. | 4914 | 9. | 3634 |
| 5. | 2363 | 10. | 852 |

பரிசு பெற்ற இலக்கங்களுக்கு உரியவர்கள் தங்களுடைய இலக்கச்சீட்டுடன் தொடர்பு கொள்ளவும்.

துன்னாலை வடக்கு, புலோலி.

நிர்வாகம்
ஆதிமூல லக்ஷ்மி நாராயண அமுதசுரபி
(23544) (24-21-14-13)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 21 - 06 - 1946



உதிர்வு 13 - 09 - 2003

**திருமதி மேரி ஞானறோஸ் ஜெயரத்தினம்**

(இளைப்பாறிய ஆசிரியை, யா/இணுவில் இந்துக் கல்லூரி)

"காக்கைக்குஞ்சுகள் தேவனை நோக்கிக் கூப்பிட்டு ஆகாரமின்றி பறந்து அலைகிறபோது அவைகளுக்கு இரையைச் சவதரித்து ஆண்டவர் கொடுக்கிறார்" யோபு: 38-41

எமக்காக வாழ்ந்தீரம்மா!
உமக்காக நாம் யாதுசெய்தோம்?
வருங்கால எமது வாழ்வை
வல்ல தேவனே நடத்துவாரம்மா!

நாளை (13.10.2003) திங்கட்கிழமை முற்பகல் 11.30மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலிப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மரணச் சடங்கில் கலந்துகொண்ட யாவர்க்கும் எமது நன்றிகள்.

ஜோ.ஐ.ஜெயரத்தினம் (கணவர்)
சிரேஷ்ட ஆசிரியர்
யா/கொண்டாவில் இந்து ம.வி.

இணுவில் மேற்கு,
இணுவில். (23508) (26-21-14-13)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 10 - 09 - 1982



உதிர்வு 30 - 08 - 2003

அமரர்

**இரத்தினசேகரம் அசன்**

எம்மண்ணில் நெருக்கடி நிலை என்று - தன்னுயிர்
காப்பதற்குக் கடல் கடந்து சென்று, அந்நிய நாட்டில்
தஞ்சம் புகுந்து "திரைகடல் ஓடியும் திரவியந்தேடு" என்ற
வாக்குக்கு அமைய - பொருளீட்டித், தன் குடும்பத்தை
உயர்த்தலாம் என்ற ஆவலோடு சென்றீரே!
அங்கு, உம் உறவினர், சகோதரர்களுடன் இணைந்திருந்து
இரண்டு வருடகாலம் வாழ்ந்தீரே! -
மிகக்குறுகிய காலத்தில் கயவர் கூட்டத்தால் ஈன
இரக்கமின்றித், தாக்கப்பட்டு இன்னுயிர் நீத்தீரே!
இனி எப்பிறப்பில் உன்னைக் காண்போமடா?
ஆவி பிரியும் போது என்ன எண்ணிப் பிரிந்ததோ? நாமறியோம்.

30.08.2003 அன்று உயிர்நீத்த அசனின் இறுதிக் கிரியைகள் இன்று (12.10.2003) ஞாயிற்றுக்கிழமை லண்டன் மாநகரத்தில் நடைபெறும் தருணத்தில் அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

- குடும்பத்தினர்

21,சுப்பிரமணியம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
T.P.021 2226435.

(23546) (26-21-14-13)

உதயன்

## விபத்துக்களைத் தடுக்க...

குடாநாட்டில் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் கூட்டப்பட்ட ஒரு விசேட கலந்துரையாடலில் விபத்துக்களால் ஏற்பட்டுவரும் விபரீதங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. படை அதிகாரிகள், பொலீஸார், அரச அதிகாரிகள் உட்பட வீதிப்போக்குவரத்துடன் தொடர்புடைய திணைக்களங்களின் அதிகாரிகளும், வாகன உரிமையாளர் சங்கங்களைச் சார்ந்தோரும் இதில் கலந்துகொண்டு விபத்துக்களைத் தடுப்பது என்பன குறித்து ஆராய்ந்திருக்கிறார்கள்.

வீதிகளில் சைக்கிள்களில் சமாந்தரமாகச் செல்வது உட்பட போக்குவரத்துக்கு இடைஞ்சலாக உள்ள தனிமனித நடவடிக்கைகளைத் தடுப்பது, மீறி நடப்போரைத் தண்டிப்பது தொடர்பாகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்றும் அந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

வீதி விபத்துக்களைத் தடுக்கும் ஒரு நடவடிக்கையாக வீதிகளை அகலமாக்குவது, போக்குவரத்துக்குத் தடையாக நிற்கும் கட்டடங்களை அகற்றுவது குறித்தும் ஆராயப்பட்டிருக்கிறது.

வீதிப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக - சட்ட விரோதமான முறையில் - கட்டப்பட்ட கட்டடங்களை உடனடியாக அகற்றுதல், அவ்வாறு செய்ய சம்பந்தப்பட்டோர் பின்னடிக்கும் பட்சத்தில் நீதிமன்றத்தின் உதவியோடு சட்ட நடவடிக்கைகளைத் தீவிரமாக்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

குடாநாட்டில் போர் ஓய்ந்துள்ள இன்றைய காலகட்டத்திலும் அகால மரணங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. அவ்வாறான மரணங்களில் கணிசமானவை வீதி விபத்துக்களால் நேர்கின்றன.

வாகனங்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்தமை, போதிய பயிற்சியோ, அனுபவமோ இன்றி வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள், பெருகிவிட்ட போக்குவரத்துகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியாத ஒடுக்கமான - சீரில்லாத - வீதிகள் என்பன விபத்துக்கள் அதிகரிக்க முக்கிய காரணிகளாக உள்ளன.

இளைய தலைமுறையினர் மத்தியில் உருவாகிவரும் சுய கட்டுப்பாடற்ற போக்கும் விபத்துக்களுக்கு வழி கோலுகின்றன. உரிமைகளை அனுபவிக்கத் துடிக்கின்ற அளவுக்கு கடமைகளையும் மதித்து நிறைவேற்ற எண்ணாத தனி மனிதனின் போக்கும் விபத்துக்களுக்கு வழி வகுக்கின்றது.

'திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்பது போல தனிமனித நடவடிக்கைகளில் மாற்றம் உருவாகாமல் சமூகம் எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியாது. விபத்துக்கள் விடயத்திலும் தனிமனித விழிப்புணர்வே அவசியமாகின்றது. வீதிப்போக்குவரத்து ஒழுங்குகளை, வீதி விதிகளை அனுசரித்து நடப்பதில் ஒவ்வொருவரும் அக்கறை செலுத்துவார்களேயானால் நிச்சயம் விபத்துக்களைத் தடுக்கலாம். அதேவேளை சட்டம் ஒழுங்கு பேணும் தரப்பினரும் வீதி ஒழுங்கைப் பேணும் பொலீஸாரும் கூட தங்கள் கடமையில் கண்ணாக செயற்பட வேண்டும்.

குடாநாட்டின் வீதிகள் பலவற்றில் போக்குவரத்துக்கு இடையூறான விதத்தில் இராணுவ சென்றிகளும், தடை அரண்களும் இன்னமும் உள்ளன. இராணுவ வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்துக்களும் திடீரென அதிகரித்திருக்கின்றன. இவை இராணுவம் - பொலீஸ் - பொதுமக்கள் மத்தியிலான உறவைக் குலைத்து சமாதான சூழலுக்கு அச்சுறுத்தல் விடுப்பனவாக மாறி வருகின்றன.

வீதிப் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள சென்றிகளை அகற்றுவதற்கு படைத்தரப்பு தொடர்ந்து பின்னடித்து வருவதால் மக்கள் ஆத்திரமடைந்து அவற்றைத் தாக்கும் அளவுக்கு நிலைமை வந்துவிட்டது. இது விடயத்திலும் நீதித்துறை கவனஞ் செலுத்தவேண்டும்.

தவறிழைப்போர் விடயத்தில் சார்பின்றி உரிய சட்ட நடவடிக்கையை எடுத்து நீதி நிலைநாட்டப்படுவதை உறுதி செய்யவேண்டும். அப்போதுதான் பயணிகள், சாரதிகளிடையே வீதி விதிகளை மதித்துப் பேணுகின்ற பக்குவம் வளரும். இதைவிடுத்து அதிகாரிகள் ஒன்றுகூடி விபத்துக்கள் பற்றி விவாதிப்பதும் தீர்மானங்களை எடுத்து அறிக்கை வெளியிடுவதும் எந்தப் பயனையும் ஏற்படுத்திவிடப்போவதில்லை.

வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பாக கடைசியாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சரிவர நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை நீதித்துறையினர் விடாது கண்காணித்து வரவேண்டும். அல்லாவிட்டால் அரசியல்வாதிகள் விடுக்கும் அறிக்கைகள் போல இந்தத் தீர்மானங்களும் காற்றோடு போய்விடும்.

சம்பந்தப்பட்ட சகலரும் இதை உணர்வார்களாக.

## காலத்தின் பதிவு



நம்பிக்கை..... படம்: தேவா

யாழ். பல்கலைக்கழக ஊடக மூலவள நிலையத்தினால் அண்மையில் செய்திப் புகைப்பட செயலமர்வு நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டவர்கள் செயலமர்வின் இறுதிநாளன்று திவகம், யாழ்.நகரில் முஸ்லிம்களின் பகுதி, சாவகச்சேரி ஆகிய பகுதிகளுக்குச் சென்று பல புகைப்படங்களை எடுத்தனர். இயல்பான வாழ்க்கையையும் இயற்கையையும் பதிவுசெய்வனவாக அந்தப் புகைப்படங்கள் அமைந்தன. அவற்றில் இருந்து சில படங்கள் தொடர்ந்து இங்கே பிரசுரமாகவுள்ளன.

# ஆயுர்வேத மூலிகை உணவை உண்பதில் ஐரோப்பியர் ஆர்வம்!

### முன்னாள் துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.12

ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற மக்கள் இன்று ஆயுர்வேத மூலிகைகளைக்கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுகளை உண்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அந்தநிலை இங்கும் ஏற்பட வேண்டும். அத்தகைய உணவு வகைகளே வளமான தலைமுறை ஒன்றை உருவாக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பவள விழா நிகழ்வுகளின் முதல்நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்திய கலாநிதி திருமதி ப.கமலலோஜினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாரம்பரிய சித்த ஆயுர்வேத மருத்துவத்தை அழியவிடாது நாம் காப்பாற்ற வேண்டும் இன்று எமது மண்ணில் இதனை நிலைநாட்டி நிற்கும் ஒரே ஒரு மருத்துவக்கல்லூரி இதுவாகும்.

இந்த மருத்துவக கல்லூரி பல வைத்திய கலாநிதிகளை இங்கு உருவாக்கியுள்ளது. எமது மக்களுடன் இணைந்து அவர்களது தேவைகளை அறிந்து அவர்களுக்கு பல சேவைகளை இந்த மருத்துவக் கல்லூரி வழங்கி வருகின்றது.

இங்கு கற்கும் மாணவர்கள் ஏனைய கல்லூரிகளில் கிடைககும் வசதிகளை விட மிகவும் குறைந்த வசதிகளுடன் பழைய கட்டடத்தில் கல்வி கற்று வருகின்றனர். இவர்களது குறைகளை நிவர்த்தி செய்யத் தொண்டு நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் என்பன முன்வரவேண்டும்.

இவ்வாறான ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் கற்ற பின்னர் அரசாங்க வேலையைப் பெறமுடியாது என்பதால் பலர் இக்கல்லூரியில் கற்க முன்வருவதில்லை. ஆனால், இக்கல்லூரியில் கற்ற அனைவரும் இன்றும் தமது சேவையைத் தொடர்ந்து மக்களுக்குச் செய்து வருகின்றனர்.

ஆகவே, இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் விடாமுயற்சியுடனும் நம்பிக்கையுடனும் தொடர்ந்து கற்றுத் தமது சேவையினை வழங்கவேண்டும் - என்றார்.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான பவளவிழா நிகழ்வுகள் இன்றுடன் நிறைவடையவுள்ளன. மூலிகைக் கண்காட்சியும் தற்போது நடைபெற்று வருகிறது.

(எ-10-ரி)

## ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விருது வழங்கும் விழா இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.12

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்த விழாவில் 'பல்லின சமூகங்கள் வாழும் நாட்டில் ஊடகங்களின் கடமை' என்னும் தலைப்பில் பேராசிரியர் எஸ். தில்லைநாதன் உரையாற்றவிருக்கின்றார்.

தேசிய ரீதியிலும் பிராந்திய ரீதியிலும் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பதினொரு பேருக்கு விழாவில் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இன்றைய விழாவில் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பி.சந்திரசேகரன், வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர்.சம்பந்தன், அ.விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், ஆர்.யோகராஜன், மனோகணேசன், இராதாகிருஷ்ணன் மற்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக வருகை தரவுள்ளனர்.

(ஐ)

### நாளை

புரட்டாதி 26
திங்கட்கிழமை
(13.10.2003)
திதி : திருதியை
மாலை 6.38 வரை.
நட்சத்திரம்: பரணி
முற்பகல் 9.01 வரை.
சுபநேரம்: 12.03 - 1.33
ராகுகாலம்: 7.32 - 9.02
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கோணல் இல்லாத தென்னை மரத்தையும், விவாதத்தில் சலிக்கும் பெண்ணையும் காண்பது அபூர்வம்.

## பெற்றோல் கான் வெடித்து வீடும், பொருள்களும் நாசம்

### வத்திராயன் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,ஒக்.12

ஜெனரேற்றருக்கு ஊற்றி விட்டு மூடாமல் வைக்கப்பட்டிருந்த பெற்றோல் கான் திடீரென தீப்பற்றி வெடித்ததில் வீடு முற்றாக எரிந்ததுடன் -

வீட்டிலிருந்த 38 ஆயிரம் ரூபா உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களும் எரிந்து சாம்பலாகின.

இந்தச் சம்பவம் அண்மையில் வடமராட்சி கிழக்கு வத்திராயனில் இடம்பெற்றுள்ளது.

தீப்பற்றிய வீட்டுக்குள் அகப்பட்ட பிள்ளைகளைக் காப்பாற்றச் சென்ற தந்தை எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இதே இடத்தைச் சேர்ந்த விரகத்தி கணேஸ்வரன் (வயது - 30) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

(எ-117)

### விதை நெல் விநியோகிப்பில் பாரபட்சமாம்!

## விவசாய சம்மேளனத்தினர் கூண்டோடு இராஜினாமா!

தென்மராட்சி,ஒக்.12

விதைநெல் விநியோகிப்பதில் கமநல சேவைகள் நிலையத்தினர் பாரபட்சம் காட்டியதாகக் கூறி விவசாய சம்மேளன நிர்வாகத்தினர் ஒட்டுமொத்தமாக பதவிகளைத் துறந்த சம்பவம் கடந்த வியாழனன்று மீசாலையில் இடம் பெற்றுள்ளது.

மீசாலை கிழக்கு விவசாய சம்மேளனத்தினர் இவ்வருடம் வழங்கப்படவேண்டிய விதைநெல் தொடர்பாக இப்பகுதி நெற்செய்கையாளர்களின் பட்டியல் தயாரித்து சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர்.

எனினும், குறிப்பிட்ட சம்மேளனத்திற்கு விதைநெல் விநியோகிப்பது பற்றி சம்பந்தப்பட்ட கமநல சேவை நிலையம் அறிவிக்காததால் சம்மேளன நிர்வாக சபையினர் அனைவரும் கடந்த வியாழனன்று நடைபெற்ற கமநல நிலைய கூட்டத்தில் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## கலந்துரையாடல்

முகாமைக் கற்கைகள் வணிகபீட 2ஆம், 3ஆம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை (13.10.2003) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மாணவர் பொது அறையில் இடம்பெறவுள்ளது. மாணவர்களை கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

முகாமைக் கற்கைகள் வணிகபீட
மாணவர் ஒன்றியம்.

(23545) (25-11-18)


## இந்திய பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள்



யாழ். புண்ணிய பூமிக்கு வருகை
ஸ்ரீசோட்டாணிக்கரை பகவதி அருள்பெற்ற
ஸ்ரீவெட்டுடைய காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்

**மணிசாமி சாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும், திருமணத் தடங்கலா? காதலில் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வித்தடையா? கடன் தொல்லையா? தொழிலில் முன்னேற்றமில்லையா? புதிய தொழில் தொடங்க வேண்டுமா? குழந்தைப் பாக்கியமில்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள். உண்மை புரியும்.

மணிசாமி சாமி
54, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி,
பழைய லிங்கம் கூல்பார் அருகில், உல்லாசப்பயணிகள் விடுதி, யாழ்ப்பாணம்.

(23373) (26-24-11-18)


## சேவை நலன் பாராட்டு



கடந்த 39 வருட காலமாக வடபிராந்திய போக்குவரத்துச் சேவையில் கடமையாற்றி இறுதி 3வருடங்களாக எமது சாலையில் முகாமையாளராகப் பணிபுரிந்து 26.09.2003 இல் ஓய்வுபெற்ற

### திரு.கா.உருத்திரசுந்தரம் (J.P.)

அவர்களின் அளப்பரிய சேவைகளைப் பாராட்டுவதுடன், அவர் மேலும் சிறந்த தேக ஆரோக்கியத்துடனும் மன மகிழ்வுடனும் வாழ எல்லாம் வல்ல ஊத்துச்சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் வழுத்தி வேண்டுகின்றோம்.

- சாலை முகாமையாளரும்,
ஊழியர்களும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை,
காரைநகர் சாலை.

(சி-30638) (25-11-18)

## கடதாசி உற்பத்தி குறித்து கருத்தரங்கு

கழிவுப் பொருள்களிலிருந்து கடதாசி உற்பத்தி செய்வது தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளில் மஹரகமவில் உள்ள தேசிய இளைஞர் பேரவையில் நடைபெறவுள்ளது.

தேசிய கல்வி நிறுவக ஆலோசகர் றிச்சட் பெரேரா இக்கருத்தரங்கை நடத்தவுள்ளார்.

இருநாள்களும் காலை 8.30மணி தொடக்கம் மாலை 5மணிவரை இக்கருத்தரங்கு நடைபெறும்.

பழைய கடதாசிகள், வைக்கோல், பழையதுணிகள், சேனைப் பயிர்ச் செய்கை மூலம் கிடைக்கும் கழிவுப் பொருள்கள் என்பவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் இத்தகைய புதிய வகை கடதாசிக்கு நல்ல சந்தைவாய்ப்பு கிடைத்திருப்பதாகவும் -

இக்கைத்தொழில் நல்ல தொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் எனவும் - தேசிய கல்வி நிறுவன ஆலோசகர் றிச்சாட் பெரேரா தெரிவித்துள்ளார். (எ-4)

## விற்பனைக்கு

கொங்கறீற் கற்கள், தூண், சல்லி, மணல் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**சி.அம்பிகைபாலன்**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.

(23437) (21-11-18)

## WANTED
### (தேவை) Investor/Patner

சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணனி, வியாபாரக்கற்கைநெறிகளுக்கான பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு Investor/Partner தேவைப்படுகின்றனர். கல்விசார் நடவடிக்கைகளுடன் தொடர்புடையவர்கள் விரும்பத்தக்கவர்.

தொடர்பு:-
**Singapore Informatics,**
Kotahena Centre,
117, Newchetty street,
Colombo-13
Tel: 012433291/2

(C/30640) (25-11-18)


தீபாவளித் திருநாளை முன்னிட்டு மலிவு விற்பனை

## கவிதாஸ் எலக்ரோனிக்ஸ்
ஸ்தாபனத்தாரின்

## விசேட மலிவு விற்பனை

13-10-2003 முதல் 30-10-2003 வரை எம்மிடமுள்ள பழைய ஓடியோ சீடி, எம்.பி.3, டி.வீ.டி. திரைப்பட சீடிக்கள் போன்றவற்றை ரூபா ஆயிரத்துக்கு (1000/=) மேல் கொள்வனவு செய்வோருக்கு

10% விலைக் கழிவு
வழங்கப்படும்

அத்துடன் 950 வாட்ஸ் ரைகர் ஜெனரேட்டர்கள் விலை குறைக்கப்பட்டுள்ளது.

மின்சார சாதனப் பொருள்களும் நியாய விலையில் கிடைக்கும்.

**கவிதாஸ் எலக்ரோனிக்ஸ்**
இல.181, நவீனசந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

(C/30648)


## அறிவித்தல்


பொன்னுத்துரை பத்மசுந்தரம் ஆகிய எனது பெயரில் (வடமாகாணம்) யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து காணிகளின் உறுதிகள் (மாசி மாதம் 2003) கொழும்பில் களவுபோய்விட்டன. இதுபற்றி கொழும்பு பொலிஸாரிடம் (19.02.2003) நடந்ததை முறையிட்டு தகவல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மற்றும் என் பெயரில் உள்ள யாழ்ப்பாணக் காணிகளை கவனிப்பதற்கும் அவற்றை மேற்பார்வையிட்டு பாதுகாக்கும் முழுப் பொறுப்புக்களையும், முழு அதிகாரத்தையும் (POWER OF ATTORNEY) எழுத்து மூலம் எனது தங்கையாகிய திருமதி தவராசா கமலாதேவி இருப்பிடம் 6/2, கண்டி வீதி, புறுடி முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். என்பவருக்கு மட்டுமே கொடுத்துள்ளேன். ஆனால், எனது மனைவிக்கோ அல்லது வேறு யாருக்குமோ நான் எந்தவிதமான அதிகாரங்களும் எழுத்து மூலம் கொடுக்கவில்லை என்பதை அறிவிக்கின்றேன். தற்சமயம் எனது உறுதிகளை களவு செய்தவர்கள் கொழும்பில், நான் அவர்களுக்கு எழுத்து மூலம் எனது காணிகளை விற்பதற்கு முழு அதிகாரங்களையும் எழுத்தில் கொடுத்ததாக ஒரு பொய்யான (POWER OF ATTORNEY) பத்திரம் செய்துகொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். அத்துடன், எனது பெயரில் உள்ள காணிகளை விற்பதற்கு முயற்சிசெய்து வருகிறார்கள் என்பதையும் அறிந்தேன். ஆகவே, எவரும் என்பெயரிலுள்ள காணிகளை வாங்க வேண்டாம். அப்படி இல்லை என்று என் பெயரில் உள்ள காணிகளை வாங்கினால் அவர்களுக்கு மிகப்பெரிய பண நஷ்டம் ஏற்படும். அத்துடன் காணிகளை களவாக வாங்கியதற்கு அவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இங்ஙனம்,
பொ.பத்மசுந்தரம்.

(23535) (25-11-18)


## சிறுக சிறுக

பிள்ளைகளுக்காக
குடும்பத்துக்காக
நாட்டுக்காக
நமக்காக
சில்லறைகளானாலும்
சேமிப்போம்.



ஒக்டோபர் மாதம் தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு மாதமாகும். சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு உதவுங்கள்.

"சிக்கனமும் சேமிப்பும்" என்ற தலைப்பிலான சுவரொட்டி போட்டியில் கலந்துகொள்ளுமாறு நாம் உங்களை அழைக்கின்றோம்.

உங்கள் சுவரொட்டிகள் மூலம் நீங்கள் நாம் ஏன் சேமிக்க வேண்டுமென்பதை முழு உலகத்துக்கும் எடுத்துரைக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் சிறிதளவு சில்லறை இதற்கு எவ்விதம் உதவும் என்பதையும் தெரிவிக்க வேண்டும். வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசுகளும் வழங்கப்படும். 3 பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்படும். 10 வயதுக்கும் 18 வயதுக்கும் குறைந்த இரு பிரிவுகளிலும் போட்டிகள் இடம்பெறும். சுவரொட்டிகளுக்கு 10 வயதுக்கு குறைந்த பிரிவுக்கு பாடசாலை அதிபரினதும் 18 வயதுக்கு குறைந்த பிரிவுக்கு பாடசாலை அதிபர், பிரதேச தபால் அதிபர் அல்லது NSB வங்கி கிளை முகாமையாளரின் சான்று கையெழுத்து அவசியமாகும்.

3வது திறந்த பிரிவு ஆகும். உங்கள் சுவரொட்டிகளை ஒக்டோபர் மாதம் 31ம் திகதிக்கு முன்னர், சுவரொட்டி போட்டி, சந்தைப்படுத்தல் பிரிவு, தேசிய சேமிப்பு வங்கி, 255, காலி வீதி, கொழும்பு 3 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

NSB
தேசிய சேமிப்பு வங்கி

# மயிலுக்குத் தோகையிருப்பதுபோல கலைஞனுக்கு ஞானச்செருக்கு அவசியம்

**ஈழத்தின் மூத்த முத்தமிழ்க் கலைஞர்களில் ஒருவரான மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர் கடந்த புதன் கிழமை தனது 72 ஆவது வயதில் காலமானார்.**

**அவர் கடந்த 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிய உதயன் கலைச்சுடர் பகுதிக்கு வழங்கிய செவ்வித் தொகுப்பு அவரது நினைவாக இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.**

வளர்ந்து வரும் இளம் கலைஞர்கள் மத்தியில் எவ்வளவோ நிறைந்த ஆற்றல்கள் உள்ளன. எனினும், எமது மண்ணில அவர்களுக்கு போதிய பயிற்சிகள் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவதில்லை. இந்தநிலை மாறவேண்டும் காரணம் இந்தக் கலைஞர்களே நாட்டின் எதிர்காலத்தில் தலைவர்கள்.

இளங்கலைஞர்கள் மத்தியில் தெய்வபக்தி, குரு பக்தி, தேசபக்தி, ஒழுக்கம், நேர்மை, அஞ்சாமை என்பன வலுவூன்ற வேண்டும். சேவலுக்கு கொண்டை இருப்பது போலவும் மயிலுக்கு தோகை இருப்பது போலுவும் இளங்கலைஞர்களுக்கு - வளர்ந்து வரும் கலைஞர்களுக்கு - 'ஞானச் செருக்கு' அழகைக் கொடுக்கும் இங்கு ஞானச் செருக்கு என்பது அகந்தையல்ல; ஆணவமல்ல; இறுமாப்பல்ல; தற்பெருமையல்ல. மாறா அன்பு, பணி, இரக்கம் மற்றும் கலைமுதிர்ச்சியே சில கலைஞர்கள் ஆணவம், அகந்தை, இறு மாப்பு, குரு நிந்தை போன்ற தீய குணங்களால் இறைவனால் அருளப்பட்ட கலைத்துவத்தின் பெருமையை இழந்து விடுகிறார்கள்.

ஆகவே, வளரும் இளங்கலைஞர்கள் கத்தி முனையில் நடப்பது போல ஞானைச் செருக்கைப் பயன்படுத்த வேண்டும். அதன்படி வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கூறுகிறார் உலகறிந்த மேதை கலையார்வலன் மகா வித்துவான் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர். உலகத் தமிழர் அறிந்த உன்னத கலைஞர்களில் கவிமாமணி வீரமணி ஐயாவும் ஒருவர். முத்தமிழ்களான இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று கலைகளும் ஒருங்கே அமையப்பெற்ற ஒப்புயர்வற்ற கலைஞராகவும் ஆயிரக் கணக்கான இசை நடன ஆசிரியர்களை இந்த மண்ணுக்கு அர்ப்பணித்த பெரும ஆசானாகவும் இவர் போற்றப்படுகின்றார். *'கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா....'* என்ற பாடலின் மூலம் எண்ணற்ற பக்தி, இசை நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றவர் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் அவர்கள்.

இத்தகைய பெருமைமிக்க மூத்த கலைஞரை - இசை வல்லுநரை - கலைச்சுடர் பகுதிக்காக செவ்வி கண்டோம்.

'ராசா வாரும்' என அழைத்த அவரது அன்புக் குரல் எனக்குப் புதிய உத்வேகத்தை அளித்ததுடன் நல்ல உபசரிப்பையும் வழங்கியது. மகா வித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயருடனான செவ்வியின் முழு விவரமும் இங்கு தொகுத்து வழங்கப்படுகிறது.

> முத்தமிழும் வல்லோன் முது மறையோன் வீரமணி
> அத்திமுக னுக்கூஞ்ச லாதியன் - தித்தித்துக்
> தேனொழுகு தீந்தமிழிற் செய்தளித்தான் கீர்த்தன நற்
> கானமெழு நாவனிவன் காண்
> - பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை -

### பிறப்பு

வீரமணி ஐயர் 1931 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் இணுவிலில் பிரம்மஸ்ரீ நடராஜ ஐயருக்கும் - சுந்தராம்பாளுக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இணுவில் இசைக் கலைஞர்களும் இயற்றமிழ் வித்தகர்களும் நெருங்கி வாழும் தெய்வீக மணம் கமழும் பெரும் பதி. அங்குள்ள பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் அருகே அமைந்ததே ஐயரின் பிறப்பிடம் - வாழ்விடம்.

இணுவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்து கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்த இவர், இளமையிலேயே பல்துறை விற்பன்னராக விளங்கினார். இதனால் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக (1947 ஆம் ஆண்டு) விளங்கிய வீ.வீரசிங்கம் 'கல்லூரியின் சகல துறைகளிலும் சிறந்து விளங்கிய மாணவன்' என்ற பதக்கத்தை இவருக்கு அணிவித்துக் கௌரவித்தார்.

சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த ஐயர் அவர்கள், தனது தமையனாரான கந்தசாமி ஐயரின் வழிகாட்டுதலினைத் தொடர்ந்து 22 ஆவது வயதில் கலை வளரும் திருநாடாம் தமிழ நாடு வரை சென்று கலையைப் பயி



லும் வாய்ப்பைப் பெற்றார். உலகப் புகழ்பெற்ற கலாஷேத்திர நடனப் பள்ளியில் இணைந்த ஐயர் அவர்கள், அந்தப்பள்ளியின் தலைவராக நடன மேதை ருக்மணி அருண்டேல் அவாகளிடம் பரதக்கலையைப் பயின்றார். இவரே ஐயர் அவர்களின் 'பரதகலா குரு' ஆவார். தொடர்ந்து இசை மேதை எம்.டி.இராமநாதையரிடம் இசைக் கலையைப் பயின்றார். இவரே ஐயர் அவர்களின் சங்கீத கலா குருவாக அமைந்தார். ஐயர் அவர்களின் சாகித்தியகலா குரு பாபநாசம் சிவன் ஆவார். பாபநாசம் சிவனிடம் தான் நேரடியாகப்பெற்ற அனுபவங்கள், கலை நுணுக்கங்கள் இன்றும் தனது மனதில் ஊசலாடுவதாக பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் தெரிவித்தார்.

### சாகித்திய கர்த்தா

எச்.எம்.வி. கம்பனியினர் வீரமணி ஐயாவின் பல்துறை ஆற்றல்களையும் வியந்து 'சாகித்திய கர்த்தாவாக' அவரை நியமனம் செய்தனர். இந்த நியமனத்தைத் தொடர்ந்து திருமயிலை கபாலீஸ்வரர் ஆலயம் மீது 'மயிலைக குறவஞ்சி' பாடப்பட்டது. திருக்குற்றாலக் குறவஞ்சியை ஆராய்ந்து அதைப் போலவே கபாலீஸ்வரப் பெருமானைத் தலைவராகவும், கற்பகாம்பாளைத் தலைவியாகவும் கொண்டு இந்த நூல் இயற்றப்பட்டது.

இசை ஆர்வலன் கொத்தமங்கல சுப்பு தலைமையில் நடைபெற்ற இந்த நூலின் வெளியீட்டு விழாவில் வீரமணிஐயர் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நூலில் இடம்பெற்ற முதலாவது பாடலான *'கற்பகவல்லியின் பொற் பதங்கள் பிடித்தேன்....'* என்ற பாடல் வீரமணி ஐயருக்கு இலங்கை, இந்தியா மற்றும் இசை வல்லுநர்கள் வாழும் சகல இடங்களிலும் அளவில்லாத பெருமையைத் தேடிக் கொடுத்தது.

'மயிலைக் குறவஞ்சி'யின் வெளியீட்டு விழாவில் மாயூரம் டி.ஆர்.விஸ்வநாத் சாஸ்திரி, சங்கீத கலாநிதிகளான முடிகொண்டான் வெங்கட் ராமையர், [illegible]யர் சாம்பமூர்த்தி, மைசூர் வாசு[illegible]சாரியார், திருமுருக கிருபா[illegible]யார், வாகீச கலாநிதி கி.வா. [illegible] கவியோகி சுத்தானந்த [illegible] போன்ற அறிஞர்களும் இசை மேதைகளான எம்.டி.இராமநாதன், பி. இராஜம் ஐயர், ஈ.கிருஷ்ண ஐயர், ப.ப.சடகேசன், முசுரி சுப்பிரமணிய ஐயர், ஜி.என்.பாலசுப்பிரமணியம், டி.ஆர். மகாலிங்கம், சூலமங்களம் சகோதரிகள் ஆகியோர் கலந்துகொண்டு வீரமணி ஐயரின் சிறப்புக்களையும, நாட்டிய இசை மாண்பையும் பாராட்டிப் புகழ்ந்து பேசினர்.

மேற்குறிப்பிட்டவர்கள் அனைவரும் உலகறிந்த - கலையுலகறிந்த - பெரும் மகான்கள். இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து வீரமணி ஐயரின திறமைகளைப் புகழ்ந்திருக்கின்றனர் எனின் அது மிகச் சிறப்புடையதே.

திருமயிலைக் குறவஞ்சியின் பெருமையை அறிந்த கபாலீஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகத்தினர் ஆலயத்தின் வாசலிலே *'கற்பகவல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன'* என்ற பாடலை கருங்கல்லிலே பொறிப்பித்ததுடன், அதன் கீழே ஆக்கியோன் யாழ்ப்பாணம் வீரமணிஐயர் எனப் பொறிப்பித்தனர். இன்றும் மேற்படி ஆலயத்துக்குச் செல்லும் பல நாடுகளையும் சேர்ந்த பக்தர்கள இதனைக் கண்டு யாழ். குடாநாட்டுக் கலைஞன் ஒருவனின் புகழைப் புகழ்ந்து பேசிக்கொள்கின்றனர்.

-வீரமணி ஐயரவர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்த சமயம் அவரால் இயற்றப்பட்ட பாடல்களைப் புகழ்பூத்த இசை விற்பன்னர்களான சீர்காழி கோவிந்தராஜன், டி.எம்.சௌந்தரராஜன், மகாராசபுரம் சந்தானம், டாக்டர் பாலமுரளி கிருஷ்ணா, சூலமங்களம் சகோதரிகள, டி.கே.ஜயராமன், சீர்காழி ஜி.சிவசிதம்பரம் போன்றவர்களும் திரை இசைக் கலைஞான மலேசிய வாசுதேவன் போன்றவர்களும் தமது குரலில் இசைமீட்டுப் பாடியிருப்பது ஈழமணித் திருநாட்டுக்குப் பெருமை தேடித்தந்துள்ளது. எனவே, உலகறியத் தமிழை, சைவத்தை எடுத்தியம்பிய ஒருவர் நமது மகாவித்துவான் ந.வீரமணிஐயர் அவர்கள் என்றால் மிகையில்லை.

### கல்விப் பணி

யாழ். திரும்பிய இயலிசை வாரிதி வீரமணிஐயர் அவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சங்கீத ஆசிரியராகவும், மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நாட்டிய ஆசிரியராகவும் விளங்கினார். இவ்விரு கல்லூரிகளிலும் பணியாற்றியவேளை அவரால் இயற்றப்பட்ட நாட்டிய நாடகங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மாவட்டம், நாடளாவிய ரீதியில் முதலாம் பரிசைப் பெற்றுக் கொடுத்தன.

'நாட்டிய நாடகங்கள்' என்றால் அது வீரமணிஐயரையே சாரும் எனக் கூறக்கூடிய வகையில் இன்றும் இலங்கையின் எந்தப் பாகத்திலும் நடைபெறும் நாட்டிய நாடகங்கள் வீரமணி ஐயாவின் படைப்புக்களாகவே விளங்குகின்றன. இதுவரை 350 இற்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்கள் ஐயரால் எழுதப்பட்டுள்ளன. இவற்றில் பலவும் இன்றும் அச்சு வாகனம் ஏறாமல் மூலப்பிரதிகளாகவே உள்ளன.

வீரமணிஐயாவின் நாட்டிய நாடகங்களில் தமிழிசை துள்ளி விளையாடும், சைவச் செழுமை, தேசப்பற்று, இன விடுதலை என்பனவும் மேலோங்கியிருக்கும்.

வீரமணிஐயா அவர்கள் பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளில ஏறத்தாழ 33 வருடங்கள் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இந்தக காலத்தில் இவரது பயிற்சிப்பட்டறையில் இருந்து பெரும் தொகையான சங்கீத, நாட்டிய, சித்திர ஆசிரியர்கள பூரண பயிற்சிபெற்று வெளியேறினர். இவர்களே இன்று இலங்கைத் தீவின் பல்வேறு பகுதிகளிலும் கலையை வளர்க்கும் ஆசிரியர்களாக, போதனாசிரியர்களாக, விரிவுரையாளர்களாக உள்ளனர். ஐயரின் தலை மாணாக்கர்களில ஒருவரான திருமதி சிவசக்தி சிவனேசன் லண்டன் மாநகரில் கலையை வளர்க்கும் வகையில் 'அக்கடமி' ஒன்றை நிறுவி பல்லாயிரக்கணக்கான மாணவர்களை இசை, நடனத் துறையில் ஈடுபடுத்தி வருகின்றார்.

கலாபூஷணம் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் இதுவரை எவரும் பாடாத 35 தாளங்களிலும், 175 தாளங்களிலும் தமிழிசைப்பாடல்களைப் பாடியுள்ளார். திருமயிலையில் கோயில் கொண்டிருக்கும் கற்பகாம்பாளின் பெருமைகளைச் சித்திரிக்கும் வகையில் 72 மேளகர்த்தா ராகங்களில் தமிழிசைப் பாடல்களைப் பாடியுள்ளதாகவும் -

பிரபல தென்னிந்திய கர்நாடக சங்கீத வித்துவான்கள் பலரும் இந்தப் பாடல்களை நூல்வடிவில் வெளியிடவேண்டுமென்ற விருப்பத்தைத் தமமிடம் தெரிவித்து அதற்கான ஆசியுரைகளையும், மதிப்புரைகளையும் அனுப்பியிருப்பதாகவும் ஐயர் அவர்கள் கூறுகிறார்.

மயிலைக்குறவஞ்சி, திருக்குறள் கீர்த்தனைமாலை, மயிலைக்கீர்த்தனை மாலை, 175 தாளக்கீர்த்தனை மாலை, 35 தாளக்கீர்த்தனை மாலை, 72 மேள ராகக்கீர்த்தனைமாலை ஆகியன ஐயர் அவர்களின் கலை நுட்பங்களையும், இசை அமைப்பையும் எடுத்துக்காட்டுவனவாய் உள்ளன. வீணை மகா மேதையான எஸ்.பாலசந்தர், சங்கீத கலாநிதி டாக்டர் பாலமுரளிகிருஷ்ணா போன்ற இசை விற்பன்னர்களும், தொல காப்பிய உரையாசிரியர் மகாவித்துவான் கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, எஸ்.எம்.கமால்தீன போன்றவர்களும் வீரமணி ஐயரின் இசையமைப்பை பாராட்டியுள்ளனர்.

ஒரு சமயம் வீரமணி ஐயரின் சங்கீத கலாகுருவான எம்.டி.இராமநாதையர் 'ராகராகினி' என்ற சுவாரஸ்யமான பாடத்தினை தனது மாணவருக்கு (வீரமணி ஐயர்) விளக்கியிருந்தார். அவரது மாணவரோ அதில ஆண் இராகம், பெண் இராகம் என்ற பால் பேதங்களை ஆதாரமாகக் கொண்டு 16 இராகமாலிகாவில் 'சாரங்கன் மருகனே' என்ற பாடலை ஆக்கினார். அரை ஆவர்த்தனத்துக்கு ஓர் இராகமாக - தம்பதிகளாக - இராகங்களை ஆக்கினார். கர்நாடக சங்கீதத்தில் இதனை சாதனையாகக் கருதிய மகாராஜபுரம் சந்தானம் அந்தப் பாடலைப் பாடியதுடன் இசைத் தட்டு வடிவில் வெளியிட்டு வைத்தார். அது தற்போது சி.டி. (C.D) வடிவில் வெளிவந்துள்ளது.

வீரமணிஐயர் அவர்கள் இராக மாலிகாவைப் பொறுத்து ஏனையோர் கையாளமுடியாத நுணுக்கங்களை சொற்பதங்களில் மாத்திரம் வைத்து ஓர் ஆவர்த்தனத்தில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட இராகங்களைக் கூடக் கையாண்டிருப்பதைக் காணலாம். ஐயரால் தாளமாலிகாவில் தாள நுணுக்கங்கள் சிதைவுபடாமல் சாகித்[illegible] பொருளுணர்வுடன், அசே[illegible]கதி ரசம் ததும்ப அமைக்கப்பட[illegible]ளன.

இந்தத் தாளங்களின் எடுப்புக்கள், [illegible]கள், தீர்மானங்கள் எல்லாம் நீண்ட அனுபவத்தின் ஆழ்ந்த வெளிப்பாடுகள். இசை உலகில் அநேகர்களுக்குப் புரியாத - தெரியாத - விடயங்களை எல்லாம் தமிழில் புரியும்படியாக நுணுக்கமாக, கீர்த்தனாசாரமாகப் படைக்கப்பட்டிருப்பது வீரமணிஐயாவின் மகோன்னதமான இசைப்பணியை எடுத்துக் காட்டுகின்றது. "உன்னை நான் காண்பதெப்போ...' எனத் தொடங்கும் சாகித்தியமும் வீரமணி ஐயரது படைப்பே. புகழ்பூத்த இசை விற்பன்னரான சீர்காழி கோவிந்தராஜன் பாடிய முதலாவது சாகித்தியமும் இதுவே ஆகும்.

சாகித்தியகர்த்தா வீரமணி ஐயா அவர்களின் இசையமைப்பை - கவியாற்றலை - ஈழத்திலும் - தமிழ் நாட்டிலும் உள்ள ஆலயங்களின் திருவூஞ்சல்கள், பதிகங்கள், கீர்த்தனைகளில் இருந்து நாம் அறியக்கூடியதாகவுள்ளது. காரணம் ஐயா அவர்கள் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான ஆலயங்கள் மீது திருவூஞ்சல், பதிகம், கீர்த்தனைகள் பாடியுள்ளார். இவற்றில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கீர்த்தனைகள் ஆலயங்களில் தினம் தோறும் ஒலிப்பதைக் காண்கின்றோம்.

யாழ்.பல்கலைக்கழகம் ஈழத் தமிழர்களுக்கான அதியுயர் கல்வி நிலையம். அந்த நிலையத்தின் முக்கிய பகுதியாக விளங்குவது நுண் கலைப்பீடம். இது ஆண்டு தோறும் எத்தனையோ இசை, நடனப்பட்டதாரிகளை ஈழத்தமிழ் மண்ணுக்கு இசை, நடனத்துறையின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்த வண்ணம் உள்ளது.

இவ்வாறான நுண்கலைப்பீடம் ஒன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நிறுவப்படுவதற்கு பிரம்மஸ்ரீ வீரமணி ஐயாவே காரணம். இந்த உண்மை பலருக்குத் தெரியாது. 1971ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில் இது குறித்து பிரசுரமான செய்தி ஆதாரத்துக்காக, தகவலுக்காக இங்கு அப்படியே பிரசுரிக்கப்படுகிறது.

### ஈழநாடு செய்தி

"யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக்கும் பல்கலைக்கழகத்தில் சித்திரம், சங்கீதம், நாட்டியத்துக்கான பட்டப் பரீட்சைகளை நடத்திப் பட்டங்களை வழங்கவேண்டும். நமது கலைகளைப் பயில்வதற்கு பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு செல்லவேண்டிய நிலைமை இதன் பின்பு ஏற்படாது. இதன் மூலம் அந்நிய செலாவணியையும் மிச்சப்படுத்தலாம்.

1971ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரியிலே (யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவது தொடர்பாக) இடம்பெற்ற விசாரணை ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய எமது சாகித்தியகர்த்தா பிரம்மஸ்ரீ வீரமணி ஐயாவின் கூற்றே மேலே தரப்பட்டுள்ளது.

இந்த விசாரணைகளின் முடிவிலேயே இங்கே பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பாகவும், நுண்கலைகளுக்கெனத் தனியான பீடம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் முடிவு செய்யப்பட்டது.

அன்றைய கல்வி அமைச்சராக விளங்கிய பதியுதீன் மஹ்மூத், வீரமணி ஐயாவின் உறுதிமிக்க வேண்டுகோளை ஏற்று நுண்கலைப்பீடத்துடன் கூடிய பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்க காரணமாக அமைந்தார்.

> "தித்திக்கும் தேன் தமிழில் நவரஸமுடன் பக்திரஸமும் ததும்ப, இலக்கணச் சுவை 'குன்றாதுமயிலைக் குறவஞ்சி' என்ற சிறிய அரிய நூலிழைத்து கூடுகட்டியிருக்கும் 'அற்புதச் சிலந்தி' நமது ந.வீரமணி என்னும் அடையாறு கலாஷேத்திர மாணவர்"
> - பாபநாசம் சிவன் -

- இவ்வாறு யாழ்.மண்ணுக்கும் தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றிய - அரும்பணியாற்றி வரும் - பிரம்மஸ்ரீ வீரமணிஐயாவை யாழ். பல்கலைக்கழகச் சமூகத்தினர் 1999 ஆம் ஆண்டு இடம்பெற்ற பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் அவருக்கு 'கௌரவ முதுகலைமாணி' பட்டம் வழங்கிக் கௌரவித்தமை இங்கு குறிப்பிடவேண்டியவிடயமாகும்.

யாழ். பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தரும், மூத்த கல்விமானுமாகிய பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் வீரமணி ஐயாவுக்கு இந்தப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். இதன் மூலம் கலையுலகம் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளைக்கும், பல்கலைக்கழகச் சமூகத்துக்கும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

## சுசந்திகாவை கைது செய்ய உத்தரவு

குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்கவையும் அவரது கணவரையும் கைதுசெய்யுமாறு மாளிகாகந்த மஜிஸ்திரேட் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சமீபத்தில் நடந்த வாகன விபத்தொன்றின் பின்னர் அங்க குறைபாடுகளைக் கொண்ட இராணுவவீரர் ஒருவரை தாக்கி அச்சுறுத்தல் விடுத்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு இருவருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அவர்கள நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இதனையடுத்து இருவரையும் கைதுசெய்யும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## கூட்டம்

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாச கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத தலைவர் ச.முருகனேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

பகவான் ஸ்ரீ சத்ய சாயிசேவா சமித்தி நிலையம் நடத்தும் போக்குவரத்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு திருநெல்வேலி, இராமநாதன் வீதியில் அமைந்துள்ள நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்குடாநாட்டில் அண்மைக் காலமாக வாகன விபத்துக்கள் அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் பொதுமக்களுக்கும் வாகன சாரதிகளுக்கும் போக்குவரத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் 7ஆம் திகதி வரையான ஒருவாரத்தை போக்குவரத்துப் பாதுகாப்பு விழிப்புணர்வு வாரமாக பிரகடனப்படுத்துவது தொடர்பாகவும் இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.(ம-5)

## 8ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### கந்தையா தர்மரத்தினம்

(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம் 02-05-1927 மறைவு:12-10-1995

"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்"

சங்கீதம் 91:1

தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.

என்றும் நினைவு கூரும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(23457) (21-14-18)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்க அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)



**மனோதத்துவ வைத்தியம்**

**(GENERAL PSYCHO THERAPY)**

யாழ்ப்பாணத்தில் 14-10-2003 - 21.10.2003 வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரை குறைவு
இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.

உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகொள்ளவும்:
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. கற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்)
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(தயவுசெய்து முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(ஜ-30618) (24-14-18)



**Department of English,**
**Psalm Institute of Engineering and Technology**
இனால் நடத்தப்படும்

**தேசிய ஆங்கில டிப்ளோமா**

நாடு தழுவிய பொதுப் பரீட்சை: May 2004

வீட்டிலிருந்து யாரும் இலகுவாகக் கற்கக்கூடியதான 24 புத்தகங்கள் கொண்ட பாடநெறிக்கான மொத்தக் கட்டணம் ரூபா 500/= மட்டுமே. விண்ணப்ப முடிவுதிகதி: 20.10.2003

பாடநெறிகள்:
1. NDET : ஆசிரியர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறி
2. NDEW : வேலை செய்வோருக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறி
3. NDEC : பொதுவான தொடர்பாடலுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறி

சுயவிவரங்கள் மற்றும் தெரிவுசெய்யும் பாடநெறி அடங்கிய விண்ணப்பம் மற்றும் ரூபா 500/= இற்கான காசுக்கட்டளையினை அனுப்பவேண்டிய முகவரி:
**Psalm Institute of Engineering and Technology**
**22-1/3, Galle Road, Dehiwala.**

காசுக்கட்டளை "PSALMS TECHNOLOGIES" என்ற பெயரிற்கு "DEHIWALA" தபாலகத்தில் மாற்றத்தக்கதாக எடுக்கவேண்டும். (23468) (24-14-18) **- Director.**



**யாழ். குடாநாட்டு மக்களே!**

உங்களுக்கொரு நற்செய்தி!!

தரமான சுவையான உணவுத் தயாரிப்புக்கு ஏற்ற நல்ல எண்ணெய் இப்போது விற்பனைக்கு வந்துள்ளது! அதுதான்




- தயாரிப்புகள் அனைத்தும் சிங்கப்பூரிலேயே மேற்கொள்ளப்பட்டது.
- கொள்கலன்களில் உள்ள எண்ணெயும் போதியில் உள்ள எண்ணெயும் தரம் ஒன்று.
- பொதியில் அடைக்கப்பட்ட எண்ணெய் மலிவு விலையில் பெறலாம்.

ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்! அதன் உண்மையான தரம் விளங்கும்.

**விமல் Vimal BRAND**

மரக்கறி எண்ணெய்
தேங்காய் எண்ணெய்
சூரியகாந்தி எண்ணெய்
செயற்கை வினாகிரி
தரம் வாய்ந்தவை!

ஏக விநியோகஸ்தர்:

**AMT Transport Service**

இருபாலைச் சந்தி,
பருத்தித்துறை வீதி,
இருபாலை.
☎: 021 222 5784

UTHAYAN Graphics (22798)


## ஈரவிழிகளால் நாம் செலுத்தும் இதய அஞ்சலி

முதலாம் வருடம் 3ஆம் மாதம்



| | |
|---|---|
| மண்ணக வீட்டில் 1926-11-26<br>உன்னத வீட்டில் 2002-10-17 | இருவருக்கு மகளாக 1927-07-21<br>இறைவனுக்கு மகளாக 2003-07-04 |
| **மாணிக்கம் கந்தப்பு**<br>(இளைப்பாறிய ஆசிரியர், சங்கீதசபை முன்னாள் நிர்வாகச் செயலாளர்) | **திருமதி குணமணி கந்தப்பு**<br>(இளைப்பாறிய ஆசிரியை, யா/பெரியபுலம் மத்திய மகா வித்தியாலயம்) |

ஆயிரம் நினைவுகள் எம்மைத் தொடும்
அனைத்தும் அடுத்த நாள் மறைந்து போகும்
தாய் தந்தை நினைவுகள் எந்த நாளும்
எங்களின் உள்ளத்தில் நின்று வாழும்
உங்களின் நினைவையே சுமந்த வண்ணம்
எங்களின் இதயங்கள் அழுகின்றன

உங்களை என்றும் மறவாத:
அன்பு மகள் பபா (க.குணரஞ்ஜினி, ஸ்ரீரஞ்சன் - Canada)
மகன் ஸ்ரீ கந்தகுமார் (Dubai)
மகள் ஸ்ரீ கந்தபாலா (Colombo)
மகன் ஸ்ரீ கந்தசீலன் (Sharjah)

அம்மம்மா, அம்மப்பாவைப் பார்த்தால் போதும்
ஆனந்தம் இரட்டிப்பாய் வளர்ந்து நிற்கும்
இனியவை எமக்கிங்கு இல்லையென்று
ஏங்கியே எம்மனம் தவிக்குதிங்கு
எங்களை நீங்கள் ஏன் மறந்திட்டீர்கள்
உங்களை நாங்கள் மறக்கமாட்டோம்

உங்கள் அன்புப் பேர்த்தி:
ஸ்ரீரஞ்சன் திவ்வியா (Canada)
உங்கள் அன்புப் பேரன்:
ஸ்ரீரஞ்சன் வக்ஷனகீதன்
(Canada)

தகவல்:
மகள்
Dr. (Mrs.) Gunaranjini Sriranyan
Canada,
3, Massey Square # 705,
Ontario, Toronto M4C 5L5 (416)-691-0400
E-mail-Keethan 85 @ hot mail.com.

| | | | |
|---|---|---|---|
| | | சந். ரா. | சனி |
| செவ். | இராசிச் சக்கரம் | | |
| | | | வியா. |
| | | வெ. கே. | சூ. பு ▲ |

# இந்த வார இராசி பலன்

## 12.10.2003 - 18.10.2003

### மாற்றம்:

12.10.2003 இல் அச்சுவினி 4 ஆம் பாதம் மேட இராசியில் சந்திரன் நிற்கும்.

உலக அரங்கில் உண்மை விளங்கும். சமாதானப் பேச்சு தொடர்கதையாகும். இருபகுதியினரும் தம்மை வலிமைப் படுத்துவர். சமாதானம், பேச்சு, இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்கள் தொடர்ந்து நடக்கும். முக்கிய தலைவர்களின் கருத்துக்கள் வெளிவரும். இந்தியாவின் வலிமை கூடும். பாகிஸ்தானில் கலகங்கள் வரும். ஈராக், ஈரானில் எதிரிகளால் அழிவுகள் வரும். மேற்கு நாடுகள் தம்மை வலிமைப்படுத்தும். இந்து சமுத்திரம், பசுபிக் சமுத்திரத்தை அண்டிய நாடுகளில் காற்றழுத்தங்களால் மழைபெய்து சில இடங்களில் அழிவுகள் நடக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

கற்பனைத்திறனால் பல புதிய திட்டங்களை உருவாக்க முனைவீர்கள். வயிற்று வருத்தம், வாய்வுத் தொல்லைகள் வரும். பொருளைப் பற்றிய சிந்தனை குடும்பத்தில் நல்லது நடக்கத்திட்டமிடுவீர்கள். 5 இல் வியாழன் பூர்வீகத் தொடர்பான இனஜனவரவு ஏற்படும். தெய்வீக மானவர்கள் உதவிகள் செய்வார்கள். பாதுகாப்புத் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### இடபம்

காத்திருந்து ஏமாற்றம். கடும் பேச்சு, வீண்பழியைக் கொடுக்கும். வீடுமனையில் சிறப்பு வரும். கை, கால்பிடிப்பு இருக்கும் தூரதேசச் செய்திகள் வரும் காலமாகும். வரவுக்குமீறிய செலவுகள் கொடுக்கும். குருத்துறை, வைத்தியத் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### மிதுனம்

அடிக்கடி மனக்குழப்பம் எதனால் வருகின்றது என்பது உங்களுக்குத் தெரியும். பொருள் பற்றி யோசனை. வாதவிறைப்பு இருக்கும். அடிக்கடி ஓடித்திரிவீர்கள். குடும்பத்தில் கலகம், அரசியல்வாதிகள் - கட்சியினர் ஆதரவுதருவர். தோட்டம், இரசாயனம், மருந்து போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### கடகம்

பகட்டுக்கு மயங்கிச் செலவு செய்வீர்கள். தாரத்துடன் கோவிப்பீர்கள். இடமாற்றம் தடைப்படும். அயலவர்களின் மறைமுகத்தாக்கம், எதிர்ப்பு உங்களுக்கு கஷ்டங்கள் கொடுக்கும். புதிய பொறுப்பு தொழில்ஸ்தானத்தில் வரும். தூரத்துச் செய்திகள் மன ஆறுதலைத்தரும். வியாபாரிகள், சந்தையில் வேலை செய்பவர்கள், காவல்காப்பவர்கள் தோட்டத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வெள்ளி.*

### சிங்கம்

புதிய துறை, புதிய திட்டம் இடாம்பீகச் செலவுகள் என்பன கொடுக்கும். காரியங்கள் வெற்றியாகும். குடும்பத்தில் கலகலப்பு, உறவினர்கள் ஆதரவு தருவர். வருமானம் அதிகரிக்கும். பொருள் வரும். தூரத்துச் செய்திகள் நன்மை தரும். இடமாற்றங்கள் சிலருக்கு ஏற்படும். பொருள்களில் கவனமாக இருக்கவும். குருத்துறை, பாதுகாப்புப் பகுதியினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### கன்னி

கற்பனைகள் அதிகம் உங்களுக்கு. அளவறிந்து கருத்துக்களைச் சொல்லவும். உஷ்ண பீடைகள், வாய்வுத் தொல்லைகள் கொடுக்கும். பொருள் இழப்பு, அவமானம் வரஇடமுண்டு. தாய்வழியினருக்கு உடல் நிலைப் பாதிப்பு கொடுக்கும். தூரத்திலிருந்து நற்செய்தி வரும். ஆசிரியர், ரி.வி. வீடியோ, செய்தித் தொடர்பானவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### துலாம்

கற்பனை வரும். இடாம்பீகச் செலவுகள் அதிகரிக்கும். தந்தைக்கு கை, காலில் காயம் அல்லது நோ வர இடமுண்டு. குடும்பத்தினருக்கு நன்மைகள் நடக்கும். தாய் வழியினருடன் கருத்து வேற்றுமை வரும். ஆடைச் செலவு வரலாம். வியாபாரத்துறை, குருத்துறையினருக்கு நன்மைகளும், புதிய திட்டங்களால் செலவுகளும் கொடுக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். இடமாற்றங்கள் நல்லதல்ல.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

**மகாதேவா ஜோதிடம்**

### விருச்சிகம்

புதிய நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். திட்டமிட்ட செயற்பாடுகள், தொழில்சிறப்பு வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் எதிர்பாலாருக்குச் செலவுகள் உயரும். அட்டமத்துச் சனியால் எதிர்பாராத விபத்து, தாக்கம் வரலாம். அவதானமாக இருக்கவும். தெய்வ வழிபாடு முக்கியமாகும். குருத்துறை, சட்டத்துறையினர், வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், புதன், வெள்ளி.*

### தனுசு

புதிய நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். தூரத்திலிருந்து உதவிகள், செய்தி வரும். அடிக்கடி பொருள், தொழில் பற்றிய கவலைகள் வரும். குடும்பத்தில் சுகயீனங்கள் கொடுக்கும். சகோதர வழியினர் தொடர்பு கருத்துவேற்றுமை வரலாம். குருத்துறை, மருந்து, பிரயாணத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி.*

### மகரம்

மனக்குமுறல், அடிக்கடி புறுபுறுத்தல். பொருள் வரவு ஏற்படும். வாக்குக்கலக்கம் வரும். காணி, பூமி சம்பந்தமான மாற்றங்கள் ஏற்படும். தொழிலில் நஷ்டம் வரலாம். கொடுக்கல், வாங்கலில் நிதானம் தேவையாகும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். சந்தைத்துறையினர் நன்மை அடைவார்கள். குருத்துறையினர், பிரயாணத்துறையினருக்கு மாற்றங்கள் வரும். கை, கால் நோ தாக்கம் சிலருக்கு வர இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள்.*

### கும்பம்

பொருள் வரவு கொடுக்கும். அடிக்கடி கோபம் ஏன்வருகின்றது? காசுக்காக பிரச்சினைப்படல், வாகனச் செலவுகள் அதிகரித்தல், தூரத்துச் செய்திவரல், தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்பு வரல் என்பன நடக்கும். சட்டத்துறையினர், குருத்துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும். போக்குவரத்தில் கஷ்டங்கள் வரலாம். நிதானமாக இருக்கவும். கை, கால் தாக்கம், நோ, வாய்வுத் தொல்லை என்பவற்றுக்கு வைத்தியம் செய்யவும். பிரயாணங்களை தவிர்ப்பது நன்று.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள்.*

### மீனம்

தொழில் ஸ்தானத்தில் புதிய திட்ட நடைமுறையால் நன்மைகள் அதிகரிக்கும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். வீடு, வாகனச்செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள் திடீரென ஏற்படலாம். தலை, கால்வருத்தம், கண் நோ, வாய்வு, சளி என்பன வர இடமுண்டு. குடும்பத்தினரின் நன்மைக்காக ஓடியாடித்திரிவீர்கள். வியாபாரிகள், சட்டத்துறையினர், மருந்துத்துறையினர் போக்குவரத்துத்துறையினர்களுக்கு நன்மை, மாற்றங்கள் ஏற்படம்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, திங்கள்.*

---

# காதல், திருமணத் தடைகளும்...

# பரத்தமை ஒழுக்கமும்...

"எல்லா உயிருக்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்" (தொல்.1169)

இன்பம் என்பது, எல்லோருக்கும் மனத்தின் விருப்பமாக வரும் ஆண், பெண் பாலுறவு நுகர்ச்சியாகும். இது உடலியல் - உளவியல் - மெய்யியல் உண்மை. மேலும் இது உலகியல் நோக்கில் இல்லறத்தார்க்குப் பேரின்பம் என்றும், துறவறத்தார் வேண்டும் வீட்டின்பத்தோடு ஒப்பிடும்போது சிற்றின்பம் என்றும் சொல்லப்படும். உலகில் மாந்தவினம் தொடர்ந்து நிலை பெறுவதற்கு இவ்வின்பம் இன்றியமையாததாகும். இது இல்லையாயின் மக்களினமும் அழிந்து, துறவறமும் அதன் வழிப்பெறும் பேரின்பமாகிய வீட்டின்பமும் (ஆன்ம விடுதலை) இல்லையாகிப் போகும். அதனாற்றான் தொல்காப்பியர், "இன்பமும் பொருளும் அறனும்" என்று இன்பத்தை முற்படக் கூறினார் என்றுணர்க. அவரே, 'காமஞ் சான்ற கடைக்கோட் காலை' சிறந்ததாகிய துறவறம் மேற்கொள்ளப்படும் என்று கூறியிருத்தலும் காண்க. வள்ளுவர் பெருமானும் -

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை" - எனக் காம இன்பத்தின் வழி நடைபெறும் இல்வாழ்க்கையையே அறமாகும் என்று சிறப்பித்தார்.

அத்தகைய சிறந்த மணவாழ்வு (இல்வாழ்க்கை அல்லது குடும்ப வாழ்க்கை) கைகூடாமல் இருப்பதற்குக் கரணியமாய் (காரணம்) அமைந்த தடைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கை, பாலின்ப நுகர்ச்சிக்கேற்றவாறே ஆண் - பெண் உடலுறுப்புகளைப் படைத்தும், அவர்தம் மரபணுக்களிலே பாலூக்கத்தைப் படைத்துமுள்ளது. புறநடையாக அல்லது இயற்கை முரணாக அல்லது விதிவிலக்காகச் சில பேடுகளும் (பேடி, பேடன்) அலிகளும் தோன்றி விடுகின்றன. இன்னும் மிகமிகச் சிலர் பாலுணர்ச்சியோ சேர்க்கை விருப்பமோ சிறிதும் அற்றவராக இருப்பர். அவருக்கும் பேடு அல்லது அலிகளுக்கும் திருமணம் வேண்டியதில்லையாம். வேறுவேறு காரணங்கள் பற்றிப் பாலுறவை வேண்டாதாரும் இருப்பர்.

அவரொழிய, மணவாழ்வை விரும்பும் ஆண், பெண்ணை ஒன்று சேர்ப்பதற்கு பண்டைத் தமிழ்ச் சான்றோர் பத்துப் பொருத்தங்களை (ஒப்புகள்) யும் பார்த்தனர். அவையாவன: ஒத்த பிறப்பு, ஒத்த ஒழுக்கம், ஒத்த ஆண்மை, ஒத்த பருவம், ஒத்த உருவம், ஒத்த அன்பு, ஒத்த நிறை, ஒத்த அருள், ஒத்த அறிவு, ஒத்த செல்வம், என்பன(பிறப்பு = குடிப்பிறப்பு, ஆண்மை = வினையாண்மை, நிறை = கற்பு) இவை பத்தும் பொருந்தக் காண்பது அரிதாகலின் பெரும்பான்மை பொருந்துதலை வேண்டுவர்.

இக்காலத்தில் பகுத்தறிவாளர் அல்லாதோர், பிறப்பியம் (சாதகம்) மூலமாக நாள் (நட்சத்திரம்), கணம், எண்ணிக்கை (மாகேந்திரம்), பெண் நீட்சி (த்திரீ தீர்க்கம்) பிறவி (யோனி), ஓரை (இராசி), கோள் (இராசியதிபதி), வசியம், இணக்கம் (வேதை), சரடு (இரச்சு) ஆகிய பத்துப் பொருத்தங்களையோ பெரும்பான்மை ஒப்பினையோ வேண்டுவர்.

மேற்படி பொருத்தங்களைப் புறந்தள்ளும் சிலர், "மனப்பொருத்தமே மணப்பொருத்தம்" என்பர்.

எப்படிப் பொருத்தம் பார்த்துச் செய்துகொண்ட திருமணங்களிலும் வாழ்நாள் முழுமையும் தம்முள் கருத்து ஒருமித்து மாறாத காதலுடன் இணங்கி வாழ்வோர் மிக மிகச் சிலரேயாம். மற்றைப்படிக்கு, பிரிந்து போவோர், ஒருவருக்கொருவர் அடிமையாகி அடங்கிக்கிடப்போர், வாழ்க்கையைப் போர்க்[illegible]மாகவோ சிறைக்கூடமாகவோ [illegible]போர், தற்கொலை[illegible] [illegible]ர் ஆகியோ[illegible] [illegible]ரவர்.

இங்கேதான், "தாரமும் குருவும் தலைவிதிப்பயன்" என்னும் பழமொழி எழுந்தது போலும். வேதனை தரும் இவ்வுண்மையை அகக்கண் கொண்டு நோக்குவோர் நன்குணர்வர்.

இந்நிலைமைக்கு மணமக்களின் பொருத்தப்பாடின்மை மட்டுமன்றி, அரசியல், பொருளாதார குமுகாய (சமுதாய)ப் புறச்சூழல்களும் காரணங்களாகும் என்பதை மேற்படி துறைவல்லுநர் விளக்கிக்கொள்வர்.

"ஆளொருவர் ஒருலகம்" ஆக விளங்கும் மக்களை ஒன்றாக வாழவைப்பதென்பது மிகவும் அரிய காரியமே. எனினும், அம்முயற்சியை ஆதியிலிருந்து இன்றுவரை அவ்வப்போது தோன்றும் பேரறிவாளர் விடாமற் செய்துகொண்டே வருகின்றனர். அது தானே அவர் தொழில்.

பாலூக்கம் தொழிற்படத் தொடங்க இளைஞரும் இளைஞையரும் இணைவிழைச்சை விரும்புவது இயற்கையே. மணப்பருவம் அல்லது தகுதி ஏற்படும்வரை அவ்வியற்கையை அடக்கி, கற்றலிலும் செல்வமீட்டலிலும் ஒழுககம் பேணுதலிலும் தம் கருத்தைச் செலுத்துதல் அவர்கடமையாகும். ஏற்ற பருவம் கல்வி செல்வம் எய்தியபின் ஆண், பெண் ஒருவரை ஒருவர் காதலிப்பது குற்றமில்லையாம்.

காதலிக்கும்போது பாலுந்தலே முற்பட்டு நிற்கும் என்பது உண்மையாம். எனினும், தாம் திருமணம் செய்து ஒன்றாக உண்டுறங்கி வாழப் போகும் வாழ்க்கை நெடுங்காலம் நிற்பதாம் (ஆயிரங் காலத்துப் பயிர்) என்பதை எண்ணி, பாலுணர்ச்சிக்கு முதன்மையளியாது அறிவோடு காதலைப் பரிமாறிக் கொள்வாராக. திருமணம் என்பது வாழ்க்கை ஒப்பந்தமே என்பதை விளங்கிக்கொண்டு, பேசித் தீர்க்கவேண்டியது சிக்கல்களையெல்லாம் காதலிக்கும்போதே பேசித் தீர்த்துக்கொள்ளல் வேண்டும்.

காதலிக்கும் இளையவர்க்கு இந்த அறிவெல்லாம் மனத்தில் உறுத்துவதும் அரிதாம். இனி, இளையவர் காதலுக்கும் திருமணம் செய்துகொள்வதற்கும் தடையாக இருப்பவை எவை எனக் காண்போம்:

1. அழகின்மை
2. பண்பின்மை
3. நாகரிகமின்மை
4. செல்வமின்மை
5. கல்வியின்மை
6. உடனலமின்மை(பிணி,நோய்)
7. திறமையின்மை
8. ஒத்தகுலமின்மை
9. பிறப்பியப் பொருத்தமின்மை
10. பருவமின்மை இனி, இவற்றிற்கு மேல் பெற்றோர் விருப்பமின்மையும் ஒரு தடையாக நிற்பதுமுண்டு. இவை எல்லாமே எல்லார்க்கும் எப்பொழுதும் தடையாக நிற்கும் என்று கொள்ளமுடியாவிட்டாலும் ஒன்றோ சிலவோ பலவோ தடையாதல் கூடும்.

இத்தடைகளைத் தாண்டும் வல்லமை, காதலிக்கும் அல்லது திருமணம் செய்யவிருக்கும் இளையவர் தம் அன்பு, அறிவு, அறம், ஒழுக்கம், துணிவு முயற்சிகளிலேயே தங்கியுள்ளது.

*"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை [illegible] பயனும் அது"* என்றார் வள்[illegible] பொருமான்.

முன்சொன்[illegible] தறைகளை மணக்கொடை[illegible] (செல்வம் சீதனம்) நிறைவுசெய்[illegible] முற்படுகிறது குமுகாயம்[illegible]னால், அம்மணக்கொடை வறுமையான குடும்பங்களில் உடனடியாகப் பாதிப்பையும் உண்டாக்கிறது. இளையவர், தாமே மேற்கொள்ளக்கூடிய தடைகளைப் பெற்றோர் இடத்திற் சுமத்தி விடுவதுமுண்டு. திருமணவாழ்வில் ஈடுபட விரும்பும் மணமக்களிடம் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் ஒருவரை ஒருவர் மன்னிக்கும் மனப்பான்மையும் அன்புடைமை, அருளுடைமையும் பொறுமையும் இருக்குமேயானால், அவர் இல்வாழ்க்கை, மகிழ்ச்சியும் இன்பமுமுடையதாயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

காதலுக்கும் திருமணத்துக்கும் உள்ள தடைகளே, இளையவரிடம் சில தீய பழக்கங்களும் ஒழுக்கக் கேடுகளும் உருவாகுவதற்குக் காரணமாகின்றன. குமுகாயத்தில் பரத்தமை ஒழுக்கம் தோன்றி வளர்ந்து வருவதற்கும் பெரிய காரணமாக அமைவதும் மேற்படி தடைகளே. "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற உயர் கோட்பாட்டை முறியடிக்கும் இருபாலார் பரத்தமையும் குமுகாயச் சீர்கேட்டை உருவாக்குகிறது.

**பண்டிதர் வீ.பரந்தாமன்**

அதேநேரத்தில், பரத்தமை ஒழுக்கம், முன்சொன்ன தடைகளால் பாதிப்புற்றோருக்குத் துயர்துடைக்கும் மருந்தாகவும், பாலியல் வல்லுறவு, பாலியற் கொலை முதலிய குற்றச் செயல்களைக் குறைக்கும் வழியாகவும் உதவுவதாகக் கொள்ளவும்படுகிறது. அதனாற்றான் மேலைநாடுகளில் பரத்தமை ஒழுக்கமும் அரசு அனுமதி பெற்றதாய் விளங்குகிறது. பண்டைத் தமிழர் அகப்பொருள் இலக்கணமும் இலக்கியமும் பரத்தமையைப் பாராட்டாது விட்டாலும் 'பரத்தையிற் பிரிவை'யும் ஒரு துறையாகப் பதிவுசெய்துள்ளமையையும் காணலாம்.

இவ்வாறு பரத்தமைக்கு இருமுகங்கள் இருப்பதனால் அதனை நாட்டினின்றும் ஒழித்து விடுதல், என்றும் அரிய காரியமாகவே இருக்கும். மணக்கொடையும் (பரிசம்/சீதனம்) இருமுகங்கள் உடைமையாலேயே, குமுகாயக் கட்டமைப்பை மாற்றினாலன்றித் தீர்க்கமுடியாத சிக்கலாக அமைந்திருத்தலைக் காணலாம்.

ஆக, இளையவர், தமக்கு காதல, திருமணம், வாழ்க்கை ஆகியவற்றில் சிக்கல்கள் ஏற்படும்போது முதியோர், அறிஞர், பெரியோர் தமது அறிவுரைகளையும் கேட்டொழுகினால் பலரும் துன்பத்தினின்றும் விடுபடுவர் என்பது திண்ணம். ✳

# வீரமணிஐயரின் மறைவு ஈடுசெய்ய முடியாதது

## அனுதாபம் தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.12

இசைவேளாளர் சமூகத்தின் உயர்வுக்கு வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் விளங்கிய மஹாவித்துவான வீரமணிஐயரின் மறைவு எமது சமூகத்துக்கு பேரிழப்பாகும் என்று அகில இலங்கை இசைவேளாளர் சங்கத் தலைவர் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் தெரிவித்துள்ளார்.

வீரமணிஐயரின் மறைவை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிறுவயது முதல் தனது பணிகளை கலைக்கே அர்ப்பணித்து வாழ்ந்த வீரமணிஐயர், இசைத் துறையில் பல ஆராய்ச்சிகளை செய்து அருஞ்சேவையாற்றியுள்ளார். நினைதவுடன் மக்களின் மனதைத் தொடக்கூடிய கவிதைகளை, ஆக்கங்களைப பாடி தனது கவித்திறமையை வெளிப படுத்தினார்.

எமது சமூகத்துடன் நல்லதொரு பாலத்தை ஏற்படுத்தி, சமூக முன்னேற்றத்துக்கும், சமூகவிழிப்புணர்வுக்கும் நல்ல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வந்தார். அவரது வழிகாட்டுதல்களை இழந்து எமது சமூகம் சோகத்தில் ஆழ்ந்துள்ளது. அவரது இழப்பு கலை உலகுக்கு மட்டுமல்ல, எமது சமூகத்துக்கும் பேரிழப்பாகும் - என்றுள்ளது.

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாண மண்ணின் மலையொன்று சரிந்துவிட்டது. தமிழ்க் கலைகளின் பாதுகாவலனாக அதன் வளர்ச்சிக்கு உரமிடும் உறுதியாளனாகக் கடந்த பல தசாப்தங்களாக சேவையாற்றிய கலைகளின் களஞ்சியம் அஸ்தமித்துவிட்டது. இலங்கையில் மாத்திரமல்லாது இந்தியா மற்றும் உலகநாடெங்கும் தனது ஈடிணையற்ற திறமையால் நிகரற்ற புகழினைப் பெற்றுக்கொண்டவர் மகாவித்துவான் ந.வீரமணிஐயர்.

அண்மையில் தமிழ்நாட்டிலே அவருக்குப் பாராட்டு விழாவொன்று நடைபெற்றது. அதில் தமிழகத்தின் இசை வல்லுநர்கள் பலரும் சமூகமளித்திருந்தனர். விழா மண்டபம் இசையாளர்களாலும், கலைஞர்களாலும் நிரம்பி வழிந்தது. விழாவில் வயலின மேதை குன்னக்குடி வைத்தியநாதனும் கலந்துகொண்டார். அவர் ஐயாவை சாஷ்டாங்கமாக விழ்ந்து வணங்கி ஆரக் கட்டித் தழுவி ஆளுயர மாலையொன்று அணிவித்துத் தனது பாராட்டினைத் தெரிவித்து உரையாற்றினார். இதனை அந் நிகழ்ச்சி தொடர்பான ஒளிநாடாவில் கண்ணுற்று மகிழ்ந்தவன் நான். இந்தியாவின் பெரிய பெரிய கலைஞர்களெல்லாம் மதிக்கும், வணங்கும மாமனிதனாக வாழ்ந்தவர் அமரர் வீரமணிஐயர் அவர்கள்.

என்று - அதில் உள்ளது.(எ-3)

### நூலக திறப்புவிழா

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் சுதுமலை வாசியான பாலசுப்பிரமணியம் குடும்பத்தினர் தமது மகளின் ஞாபகார்த்தமாக கட்டிக் கொடுத்த நூலகத் திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் த.தர்மசோதி தலைமையில் நடைபெற உள்ள இவ் விழாவில் வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன பிரதம விருந்தினராகவும், உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் க.தனபாலசிங்கம் ஆகியோர் சிறப்புவிருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (எ-152)

### நூல் வெளியீட்டு விழா

பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய 'கூலிக்குவந்தவன்' (நாவல்) நூல்வெளியீட்டுவிழா நாளை திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் ஆரியகுளம் தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) தலைமையில் இடம்பெறும இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் நூல் ஆய்வுரையை 'கலைச்செல்வி' ஆசிரியர் சிற்பி, ஆசிரியர் ச.இராஜேயன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ம-9)

### தொலைக்கல்வி ஆசிரியர் கவனத்துக்கு!

வலி.கிழக்கு,ஒக்.12

தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கைச் சந்தித்து கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும்-

மேற்படி தொலைக்கல்வி பயிற்சியில் இணைந்து பயிற்சி பெற்ற ஆசிரியர்களை தமது பிரச்சினைகள் தொடர்பாக தொலைக்கல்வி ஆசிரியர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் தி.இரவிந்திரநாதன் கேட்டுள்ளார். (எ-180)

### பரிசுத்தினம்

வலி.வடக்கு,ஒக்.12

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசுத்தினம் எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் சுபுணனியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் சிறப்பு விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, வாழ்வகத் தலைவர் செல்வி அமீன் னத்தம்பி ஆகியோரும் கலந்துகொளவர். (எ-86)

## மாகாண ஊழியருக்கு விடுதி வசதி

வடக்கு-கிழக்கு மாகாண சபையின கீழ் உள்ள திணைக்களங்கள், அமைச்சுக்களில் பணியாற்றும் அரச ஊழியர்களின் நன்மை கருதி வருடந்தோறும 50 விடுதிகள் அமைக்கப்படவுள்ளன என ஆளுநர் அசோக ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். ஊழியருக்கான விடுதி பிரச்சினை குறித்து அரச உத்தியோகத்தர் சம்மேளனம் ஆளுநருக்கு எடுத்துக் கூறியதை அடுத்தே அவர் இந்த உறுதி மொழியினை வழங்கியுள்ளார்.

இதன்முதற்கட்டமாக இவ்வாண்டு முடிவிற்குள் 14 விடுதிகள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் 6 விடுதிகள சிற்றூழியர்களுக்கும், 6 விடுதிகள் நடுதர உத்தியோகத்தர்களுக்கும், 2 விடுதிகள் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் அமைக்கப்படவுள்ளன. (எ-10-148)


### சுத்திகரிப்புத் தொழிலாளர் தேவை

சுத்திகரிப்புத்தொழிலாளராகப் பணிபுரிய விரும்புவோர் தேவைப்படுகின்றனர். உடனடியாக பெயர்களைப் பதிந்துகொள்ளுமாறு கேட்டுக கொள்கின்றோம்.

வயதெல்லை 22-40 வரை

**கிளீன்வெல்,**

866, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(21-11-11) (23536)





# இதய நெற்

IDAYANET Internet Explorer
http//www.idayanet

A-9 திறந்து-நீ
எத்தனையோமுறை போய்வந்துவிட்டாய்
இன்றிங்கு வந்த இன்ரநெற்றிலும்
ஏறியுல்லாசமாய் இருக்குதடி
காதல் வைரஸ்.
Eமெயில்களிலும் இரவுபகலாய்ப்
பரிமாறப்படுகிறது
Love மெயில்கள்.
உன் இதயநெற் மட்டுமேன்
இன்னும் வேலை செய்யாது
"இறுகிப்போய் கிடக்கிறது...?
ஒருமுறை உன்னிதயநெற்றில்
எனை ரைப்செய்தா லென்ன?
ஒருமுறை எனை
ஸ்கான்பண்ணிக் கொண்டாலென்ன?
உன் இதயநெற்றில்!

-சிவப்பிரியன்
யாழ்ப்பாணம்.

Done | My Computer
Start | Cannot find server - ... | 12:19 PM

# ...களே புக வழியில்லை

உயிர்தந்த எங்கள்
நெல் வயல்களில்
உழவர்களின்கால்களிற்கு
எச்சரிக்கையாய் விளைகிறது
மிதி வெடிகள்...
மண்ணோடு நாளுமுறவாடி
மகிழுமெங்கள் மண்வெட்டிகள்
இன்று-
மண்ணோடு பேசப்பயந்து
'மண்ணினை வெறுத்து'
மூலைகளில் உக்கிப்போய்
உறங்கிக் கிடக்கிறது....
எங்களுயிர்கள் ஜனனித்திமண்
எங்களூர்,
நாங்கள் தாவியிலாடிய
அழகுக்குடிசை நிலம்
எங்கள் கிராமம்,
கால்கள்புதய
கவடியாடும்
கடற்கரைகள்,
என்றுமெம் பண்பாடும்
பண்பாட்டுப் பட்டினங்கள்
'யாவுமெங்கள் கண்களே எட்டாத
உயர்பாது காப்பு வலயங்கள்...

-ரி.எஸ்.சிவா

# மானம் காத்த மறக்குடி வேந்தன்!



4

ஆக்கம்: புலவர் ம.பார்வதிநாதசிவம்

"போர் வேண்டேன் இனி" என்றே சேரன் தானும்
புகழ்வேண்டும் பிற பணிகள் தொடரலானான்
பார் வேண்டும் பண்பெல்லாம் தம் பாற்கொண்ட
பலவாய இலக்கியமும் படைக்கச் செய்தான்
ஆர் வேண்டும் போதிலுமே ஈகை செய்தான்
அன்பு செய்தான் அறம் செய்தான் நன்மை செய்தான்
பேர் வேண்டும் ஊக்கத்தை உடையொர்க்ககன்றும்
பெரும் பணியும் நினைத்ததுமே முடியும் அன்றோ

குட்டுவனின் ஆட்சியிலே வாழும் பேற்றைக்
குவலயத்தே பெற்றிட மக்கள் எல்லாம்
எட்டுணையும் துன்பம் இன்றி வாழலானார்
எல்லோரும் குட்டுவனைப் போற்றலானார்!
பட்டொளி வீசிப்பறந்த சேரன் கொண்ட
விற்கொடியைப் பாரெல்லாம் போற்றக்கண்ட
துட்ட குணவடவர் சிலர் அழுக்காறென்னும்
தொன்மை வருபாவியினால் தூண்டப்பெற்றார்.

புலவரெல்லாம் குட்டுவனைப் பாடக் கண்டும்
புவியெல்லாம் துவன் புகழே வளரக் கண்டும்
நிலையறியாக் கனக விசயன் என்பார்கள்
நிம்மதியாய் கிடக்கின்ற புலியின் வாலை
வலிய வந்து மிதிப்பது போல் செருக்குற்றோராய்
"வையகத்தே எம் போல்வார் இராமையால் தான்
சிலர் தமிழர் இமயத்தே விற்சின்னத்தைச்
செதுக்கினார் இன்று நாம் இருக்கும் போதிலை

இமயத்தின் அருகினிலும் வருவராமோ?
எனக் கேட்டார்" இச் செய்தி கேட்போர் அந்தச்
சமயத்தே குட்டுவனின் செவியின் கண்ணே
தவறாமற் சேர்த்திட்டார் வெகுண்டான் சேரன்
நமை இன்று வடநாட்டார் பழிப்பதென்றால்
நற்ற மிழைத் தமிழ் நாட்டைப் பழிப்பதாகும்
சமய மிதே அவர் கொட்டம் அடங்கல் வேண்டும்
தறுகண்மை அவர் அறிதல் வேண்டும் என்றே

சிங்கமெனக் குட்டுவன் தான் கர்ச்சித்திட்டான்
சினமுற்ற அவன் முன்னே நின்றோர் எல்லாம்
"துங்கமிகுகுடிப்பிறந்தோய் நின்றன் சீற்றம்
தூயதுவே ஏற்றதுவே பகைவர் எண்ணம்
பங்கமுறச் செய்திடுவோம் தமிழர் வீரம்
பாரறியச் செய்திடுவோம் வெல்வோம்" என்றே
தங்க நிகர் சேரர் குலத் தோன்றல் முன்னர்
தங்கருத்தை ஆர்வத்தைத் தெரிவித்தார்கள்

"முழங்கட்டும் போர் முரசம்! தமிழர் வீரம்
மூளட்டும்! ஒளி செய்யட்டும் பகைவர் நாட்டில்!
களங்கண்டதேர் குதிரை யானை காலான்
காட்டட்டும் வலிமையினை! மாற்றார் நாட்டில்
விளங்கட்டும்! எமது கொடி அவர் தம் நாட்டில்
மேவட்டும்! புலவரெல்லாம் நம் வீரத்தை
துளங்கட்டும்! பகைவருடல் என்றான் சேரன்
சொல்லதனைச் செயலாக்கும் வீரர் முன்னே !

கடமையினை உயிரை விட மேலாய்ப் போற்றும்
கருத்துடைய சேரன் தன் வீரர் எல்லாம்
திடமுடனே சேரன் தன் ஆணைதன்னைச்
செயலாக்க முன் இருந்தார் வெற்றி ஒன்றே

வளரும்....

# வெட்கமடைந்தேன்

பறவையினம்
மனித மொழி படிக்கும்
பறவையினத்தின்
மொழி தெரியுமா உனக்கு?

கையில்லாமல்
கழுத்தால் உழைத்து கொட்டும்
காளைகள்
கை நீட்டியதுண்டா உன்னிடம்?

இருள் துரத்தும்
வான தேசத்தின்
வைரதீபங்கள் ரெண்டும்
கையில் பிரம்புடனா
களத்தில் குதித்தது?

விழித்த கண்கள்
செத்து மாண்டாலும்
உதவுவதே நோக்கமாக கொண்டிருக்கும்
பூமித்தாயின்
புதிர் கேளும்....
வாழ்க்கை முடிந்ததும்
வயிற்றுக்குள் அழைக்குதல்ல...?

மனிதம்
மரித்த மனித வர்கத்திடம்
கேள்விகள் தொடுத்த பேனா
கேலியாய் கண்சிமிட்டின
என்னைப்பார்த்து!
நானும்
மனிதன் என்பதால்!

-தமிழ்ப்பிரியன்
வட்டுக்கோட்டை.

# கவிதைக் கணுக்கள் மலையகத்தில்....

இங்கு..!
எல்லாம் நீளந்தான்
நதி..
பாதை..
காடு
பசி
ப்பட்டினி, பஞ்சம்..
நான்.!
தாலாட்டில் உறங்கியதை விட
ஒப்பாரியில் தூங்கிப் போனது தான்
அதிகம்-
தண்ணீரால் நனைந்ததை விட
தாயின் கண்ணீரால் நனைந்தது தான்
அதிகம்..

-க. சிவகுமார்
மஸ்கெலியா.

# அண்ணாவும் நானும்



நீ......
என் உணர்வுகளை
வென்றவன்.
குறுகிய வட்டத்தின்
விட்டம் வழியே
ஓடிய என்னில் இருந்து
சுதந்திரமாய் விலகியோடியவன்.

உனது புருவம்...
உனது விழி......
உடல் வாகு......
மேடு பள்ளங்களையும்
முட்புதர்களையும்
மிதித்து முன்னேறும்
உனது பாதம்
எல்லாமே வலிமையாய்த்தானிருக்கின்றன...

நான்
ஆச்சரியக் குறி
முகத்தில் விழ.
மௌனமாய் வியக்கிறேன்!

நீ
ஏந்தியிருக்கும் துப்பாக்கி - எமது
இனத்தின் விடியலுக்கானது
நீ போர்த்தியிருக்கும்
வரிகள் படர்ந்த மேனி
தன்மானக் குறியாகத்
தெரிகிறது....!
உனது பாதணி
ஆக்கிரமிப்பை
மிதிக்கவல்லது.

அம்மா, அப்பா
அக்கா, தங்கச்சி- என
போலிப் பாதுகாப்பிற்கு
நானிருக்க- நீ
எனக்குப் பாதுகாப்பாய்
இருக்கிறாய்.

நீ - ஒரு
புனித அருவியடா
பாறைகளைப்
புரட்டிப் போடுகிறாய்
ஈரமுள்ள மரங்களை
தழுவிச் செல்கிறாய்
இன்னும் இருக்கின்றவைகளை
ஆற்றுப்படுத்துகின்றாய்.....

உந்தன் வகிபாகத்தில்
நானொரு
புள்ளியாகக்கூட
இல்லை!



உனது
வழிகளில் பயணிக்க
எனது மனம் ஏங்குகிறது!
ஆயினும்-அண்ணா!
உன்னை முழுமையாக வெல்ல
என்னால் முடியாது.
உனது கல்லறையின்
ஒற்றைத் தீபத்தில்
உறுதி எடுக்கிறேன்
உனது துப்பாக்கியை - என்
தோளில் கொழுவி விடு!

-எ[illegible] தேசிகன்
[illegible]

# வட இந்து மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா

தலைவர் :- செல்வி அ.கனகரத்தினம் (அதிபர்)
காலம் :- இன்று (12.10.2003) ஞாயிறு பி.ப. 1.00மணி
பிரதம விருந்தினர் :- உயர்திரு.வி.அருளானந்தம் அவர்கள்
*(பிரதிக் கல்விப்பணிப்பாளர், வடமராட்சி கல்விவலயம்)*
சிறப்பு விருந்தினர்:- உயர்திரு. ச.சிவராஜசிங்கம் அவர்கள்
*(தபால் அத்தியட்சகர், யாழ்ப்பாணம்)*
பரிசில் வழங்குநர் :- உயர் திருமதி இந்திராணி அருளானந்தம் அவர்கள்

வட இந்துமகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.
(C/36659) (25-13-14)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர், பா.அ.சங்கம்.



உ
ஸ்ரீராம ஜெயம்

## சோதிடர் பாலகுருசாமி கணேசலிங்கம்
## பாலகுரு சோதிட நிலையம்



45 ஆண்டு காலம் யாழ். வண். நீராவியடி பிள்ளையார் கோயில் அருகில் சோதிடத் தொழில் புரிந்து மக்களிடையே நன்மதிப்பும் பிரபல்யமும் பெற்றவரான

**சோதிடமேதை**
அமரர் S.பாலகுருசாமி அவர்களது
இளைய வாரிசு
**சுபா.கணேசலிங்கன்**

தற்போது இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ளார். ஜாதகம் கணித்து எழுதுதல், பலன் சொல்லுதல், எண் ஜோதிடம் பார்த்தல், திருமணப் பொருத்தங்கள், நிலையம் பார்த்தல், வீடு வாஸ்து, கிரகதோஷ நிவர்த்திக்கு வழி அறிதல் அனைத்துக்கும் அவரை நேரில் சந்தித்து துல்லியமான பலன்களை அறிந்து கொள்ளுங்கள்.

☎ 222 6339

சோதிடர் சுபா.கணேசலிங்கன்,
*நியூ ஆனந்தா மேல்மாடி,*
NA *லொட்ஜ், 185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
(23559)(25-13-14)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
23 - 04 - 1930



மறைவு
11 - 09 - 2003

## திருமதி குமரேசு மகேஸ்வரி


அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்முன்
வாழ்ந்திட்ட அன்னையே
உங்கள் பிரிவை தாங்கமுடியாமல்
தவிக்கின்றோம் அம்மா!

இன்று (12.10.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்.**

*15/9, மலர்மகள் வீதி,*
*அரியாலை.* (23386) (26-13-14)

# 6ஆம் மாத நினைவலைகள்



*மலர்வு*
**28.04.1972**

*உதிர்வு*
**12.04.2003**

எம் பாசமிகு அன்புச் செல்வனே!
நீ எம்மைவிட்டுப் பிரிந்து
6 மாதங்கள் ஓடி மறைந்துவிட்டன!
எப்படி ஐயா உம்பிரிவுச்
சுமையைத் தாங்குவது?

தனிமையில் உன்
ஐயாவும் அம்மாவும்
உன் ஒவ்வொரு அசைவுகளையும்
நினைத்து நினைத்து – உருக்குலைந்து கதறுகின்றோம்.
உன் உடன் பிறப்புக்கள் – உன்னை
எந்நேரமும் நினைத்து நினைத்து –கண்ணீர்
வடிக்கின்றன.
எம் எழில் வேந்தனே! – உம்மை எப்போது
ஐயா நாம் காண்பது?
எம் கண்ணீர்களை உமக்குக்
காணிக்கையாக்குகின்றோம்.

உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

*செம்பியன்பற்று வடக்கு,*
*செம்பியன்பற்று.*

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## பவுலினப்பு ஜோஜ்வின்சன் (சுரேஸ்)

(23562)

## தரவைக்குளத்தை அதிகாரிகள் குழுவினர் பார்வையிட்டனர்

காரைநகரில் பாரிய அளவில் புனரமைக்கப்பட்டு வரும் தரவைக் குளத்தினை விவசாயக் கால்நடை அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழுவினர் நேற்று பார்வையிட்டனர்.

காரைநகருக்கு நேற்று விஜயம் செய்த விவசாய காலநடை அமைச்சின் செயலாளர் நறுசேன கெட்டி ஆராட்சி, கமநலசேவைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் லூக்கல் இந்துருகெல்ல, எகாப்பேக்கடுவ விவசாய ஆராய்சசி பயிற்சி நிலையப் பணிப்பாளர் எஸ்.சொய்சா ஆகியோர் அடங்கிய குழுவினரே பாரிய அளவில் செயற்படுத்தப்பட்டு வரும் குளப் புனரமைப்பு வேலைகளைப் பார்வையிட்டனர். இவர்களுடன் இந்து கலாசார அமைச்சா த்.மகேஸ்வரன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கே.சுந்தரேசன், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம் ஆகியோரும் குளப்புனரமைப்பு பணிகளைப் பார்வையிட்டனர். (எ-73)


# பரீட்சை!

2003 - தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை
**விசேட வினாத்தாள் - 3**
இன்று (12.10.03) பி.ப.3 மணி (பு.நே.)

தரம்-9. தரம்-11. விசேட இறுதிப் பரீட்சை
**31.10.2003 காலை 9 மணி**

2004-தரம்-4 மாணவர்களுக்கான விசேட புலமைப் பரிசில் பரீட்சை வகுப்பு தகுதிகாண் தேர்வோடு 21.10.2003 மாலை 3 மணிக்கு ஆரம்பமாகின்றது.

தரம்-5. தரம்-9. தரம்-11 வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
"மாதிரிப்பரீட்சை செய்யாமல் இறுதிப் பரீட்சையில் வெற்றி பெற முடியாது"

**சயன்ஸ் அக்கடமி,**
நல்லூர் (கோயில் முன்பாக)
(23565)



# தென்னந் தோட்டம் விற்பனைக்கு

கச்சாயில் 104 ஏக்கர் தென்னந் தோட்டம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
01-2594383



# விற்பனைக்கு

சரசாலை தெற்கில் 42 பரப்பு நெற்குழி வளவு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
தெய்வேந்திரம்,
தபால் அதிபர்,
கொடிகாமம்.
(சி-30660)(13-16)



# வீடு விற்பனைக்கு

வளாக வீதி, திருநெல்வேலியில் 3 பரப்புக் காணியில் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
**222 6856**
(23563)(13-16)


# முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு வதிவிட பயிற்சிமுகாம்

யாழ்.மாவட்ட முன்பள்ளி கல்வி இணைப்பாளர்களுக்கு வதிவிடப் பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல தொடர்ச்சியாக 21நாள்கள் யாழ். முத்திரைச் சந்தியில் உள்ள முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தில் இந்த பயிற்சி முகாம் நடத்தப்படும். இந்த பயிற் சியினை போரூட் நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், கல்வித் திணைக்களம, சுகா தாரத்திணைக்களம் ஆகியவற்றின் வள ஆளணியினர் வழங்குவர். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 24 முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர்களும் இந்த முகாமில் கலந்து கொள்ளவுள்ளனர். இதே போன்று மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, வவுனியா மன்னார், ஆகிய மாவட்டங்களிலும் இந்த முகாம் நடத்தப்படவுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி மாணிக்கம்

(இளைப்பாறிய ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை, இளைப்பாறிய அதிபர், கல்வியங்காடு இந்துதமிழ்க் கலவன் பாடசாலை)

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் செட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி மாணிக்கம் அவர்கள் 10.10.2003 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் சங்கத்தானையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் வண்ணார்பண்ணை, இந்துக்கல்லூரி ஒழுங்கையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மரகதவல்லி (ஈசக்கா, இளைப்பாறிய ஆசிரியை, யா/இந்து ஆரம்ப பாடசாலை, நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி தங்கலட்சுமி ஈஸ்வரமோகன், ஸ்ரீபாஸ்கரன், விசாகன் ஆகியோரின் அருமைத தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**Mrs T.EASWARAMOHAN,**
**15,ASH CLOSE,**
**NEW MALDEN,**
**SURREY KT 3. 3EA, U.K.** (23548)(25-13-16)

தகவல்:
திருமதி த.சிற்சபேசலிங்கம்,
56/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

## முருகேசு முத்துக்குமாரசாமி (மூனா)

(யா.ப.நோ.கூ.ச. முன்னாள் ஊழியர்)

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட மூனா என்று அழைக்கப்படும் முருகேசு முத்துக்குமாரசாமி 09.10.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு-வள்ளியம்மையின் கனிஷ்ட புதல்வனும் ஞானமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற பொன்னுத்துரை இராசம்மா, செல்வபாக்கியம் (கிளி), நாகலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பாஸ்கரன் (நோர்வே), மாலினி, ராகினி (ஜேர்மனி), பத்மினி (நோர்வே), குமுதினி (நோர்வே), நந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜி (நோர்வே), பாலா, ராமச்சந்திரன் (ஜேர்மனி), சிறிகந்தராஜா (நோர்வே), வரதராஜன் (நோர்வே), பாபு ஆகியோரின் மாமனும் காலஞ்சென்ற பூரணம், நாகரெத்தினம் (சின்னத்தங்கச்சி), ராசமணி, மனோன்மணி, செல்லத்துரை (ஐயர்கடை) ஆகியோரின் மைத்துனரும் அபி, இந்துஷா, சயந்தன், அரவிந், பிரவீன், லதுசன், லதீசன், லக்ஷி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2003) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி, இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*38/1, A.V. றோட்,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.* (23558)(25-13-16)

தகவல்:
குடும்பத்தினர்,
செல்லத்துரை (மாமா) ஐயர்கடை.

## வைத்தியகலாநிதி கனகரத்தினம் பரமானந்தம் (LMPH DELHI)

வைத்தியகலாநிதி க.பரமானந்தம் நேற்று (11.10.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியகலாநிதி கனகரத்தினம்-சின்னப்பிள்ளை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் இராசலெட்சுமியின் அன்புக் கணவரும் புஸ்பவதி (U.K.), சற்குணம், பரிமளநாயகி, துரைராசா (Acc...), Dr.நாகராசா ஆகியோரின் அருமைச் சகோதரரும் கனகரத்தினம், பத்மினி, காலஞ்சென்றவர்களான நடராசா, குமாரசாமி, பரமேஸ்வரி மற்றும் தியாகராஜா (கனடா), காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் சந்தானலெட்சுமி (U.K.), கமலாதேவி, ஜெகநாதன் (ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி), சந்திரா ஆகியோரின பாசமிகு தந்தையாரும் கனகசபை (ஓய்வுபெற்ற நிலஅளவையாளர், மாவத்தகம), சிவநாதன் (ஸ்ரீஸ்கந்த பவனம் றைஸ்மில், வவுனியா), இரத்தினசிங்கம் (நிர்வாக உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை), காந்திமதி ஆகியோரின் மாமனாரும் கேசவன் (U.K.), ஸ்ரீராம் (U.K.), அருண்மொழி (H.N.B.), அரவிந்தன் (Seylan Bank), அம்பிகை (SevaLanka), ஆரூரன் (U.K.), ஆர்த்திகா, அகிலன் (M.L.T., ஆதாரவைத்தியசாலை, மந்திகை), மதன் (யாழ். பல்கலைக்கழகம்), செந்தூரன், திவ்யா ஆகியோரின் பேரனும் கம்சத்வனி, கங்கேஸ்வர் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2003) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக் கொள்ளவும்.

*64, அரச வீதி, நல்லூர்.* (23557) (25-13-16)

தகவல்:
ப.ஜெகநாதன் (மகன்)

## காசிநாதர் கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

புத்தூர், சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் கனகரத்தினம் அவர்கள் 08.10.2003 புதன்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிநாதர்-பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற வைத்தியநாதர்-தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் செல்லம்மாவின் (ஆத்தை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் கனகசிங்கம், சின்னம்மா ஆகியோரின் அன்புச சகோதரனும் இரவீந்திரன் (ஆஸ்திரேலியா), வசந்தி (ஆசிரியை, கொழும்பு), சுமதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வானதி (ஆஸ்திரேலியா), மோகனதாஸ் (கொழும்பு), திருஞானசம்பந்தமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநயா, கம்சிகா, ஜனுயா, சுலோசன், அனுசன, கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுககொள்ளவும்.

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு,சுன்னாகம். (23560)

தகவல்:
திருமதி க.செல்லம்மா
(மனைவி)
(14-13-25)

### உடுவில் கல்விக் கோட்டத்தில்

# ஜீ.சீ.ஈ.சாதாரண மாணவருக்கு வழிகாட்டல் வகுப்புக்கள்

வலிகாமம்தெற்கு,ஒக்.12

இவ்வருடம் நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக, மாணவர் கல்வி மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உடுவில் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளா செ.குபேரநாதன் ஏற்பாடு செய்துள்ளா.

இதன் முதற்கட்டமாக உடுவில் கோட்ட குடும்பப் பாடசாலைகளை இணைத்து சம்பந்தப்பட்ட பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்கு தோறறும் மாணவர்களுக்கென விசேட வழிகாட்டல் வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

பிரதி சனிக்கிழமை தோறும் இணுவில் இந்துக்கல்லூரி, ஸ்கந்தவரோதயக்கல்லூரி, உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, ஏழாலை மகாவித்தியால்யம், இராமநாதன் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இந்த வழிகாட்டல் வகுப்புகள் நடைபெறும்.

தமிழ்மொழி, ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல் வகுப்புக்களே நடைபெறவுள்ளன.

(எ-152)

# கூரை பிரித்து இறங்கி 25பவுண் நகை திருட்டு

### நுணாவில் பகுதியில் சம்பவம்

சாவகச்சேரி,ஒக்.12

பட்டப்பகலில் வீட்டின் கூரையைப் பிரித்துக்கொண்டு வீட்டினுள்ளே இறங்கிய திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த 25 பவுண் எடையுள்ள நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் நுணாவில், தாளையடி அம்மன் கோயில் அருகில் உள்ள 2 ஆம் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது.

மின்சாரசபையின் சாவகச்சேரி அலுவலகத்தில் பணிபுரியும் எஸ். கனக சபை என்பவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் எவரும் இல்லாத நேரம் பார்த்து மிகச் சாதுரியமாக இந்தத் திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலீஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(எ-31)

# ஜே.டி.சி.ஏ. வெற்றிக் கிண்ண கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.12

யாழ் மாவட்ட கிரிக்கெட் சம்மேளன வெற்றிக் கேடயத்துக்கான கிரிக்கெட் சுற்று இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கிரிக்கெட் சம்மேளனம் நடத்தும் இச்சுற்றின் இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொனியனஸ் விளையாட்டுக்கழகம் மோதுகின்றது.

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம், அரை இறுதிப்போட்டியில் கே.ஸி.ஸி.ஸி அணியை வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம், அரையிறுதிப் போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வென்று இறுதிப்போட்டிக்கு வந்தது.

இந்த இரு அணிகளும் இச்சுற்றில் ஒரு போட்டியில் மட்டும் தோல்வியடைந்திருந்தன.

அணி வீரர்களின் விவரம் பின்வருமாறு:-

**ஜொனியன்ஸ் அணி வீரர்கள்**

வி.குமணன் (தலைவர்), வி.விஸ்ணுவர்த்தனன் (உபதலைவர்), சி.எம்.டினேஸ், பீ.கஜரூபன், ரி.சி.அன்ரூ, எ.கிரேஸ், எம்.மயூரன், சி.எஸ்.வில்சன், எஸ்.ரஜீவன், ரி.கிருஷாந்த், பி.சஜிந்தன், பி.லவேந்திரா, ச.அகிலன், எ.தனஞ்செயன்.

**ஜொலிஸ்ரார் அணி வீரர்கள்**

எஸ்.லக்சுமிகாந்த், என்.சிவராஜா, எஸ்.நாதன், எஸ்.மகேந்திரராஜா, எஸ்.சைலேஸ்வரன், எஸ்.கௌசீகன், ஆர்.கிருஷ்ணராஜா, வி.மணிவண்ணன், எஸ்.கோபிநாத், எஸ்.அருண்குமரன், கே.ராஜாதித்தன், எஸ்.தேவக்குமார், பீ.ஜெபரூபன், ஆர்.கபிலன், ஆர்.வரதன்.

ஜொனியன்ஸ் அணி வீரர்கள்



ஜொலிஸ்ரார் அணி வீரர்கள்



## சுற்றுலா செல்ல ஏற்பாடு

தெல்லிப்பழை,ஒக்.12

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தமது குடும்பசகிதம் சுற்றுலா மேற்கொண்டு தென்பகுதி செல்லவுள்ளனர்.

ஊழியர் நலன்புரிச் சங்க நிதியத்தின் ஏற்பாட்டில் இச்சுற்றுலா இடம் பெறவுள்ளது.

(எ-10)

## நீரிறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

வலி.மேற்கு,ஒக்.10

'முவிமொண்டோ' நிறுவனத்தினால் இரண்டு சனசமூக நிலையங்களுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

சுழிபுரம், பெரியபுலோ சனசமூக நிலையத்துக்கும், குடாக்கனை அம்பாள் சனசமூக நிலையத்துக்குமே இவை வழங்கப்பட்டுள்ளன.

(எ-10-175)

## கட்டட விவரம் சேகரிப்பு

வலி.வடக்கு,ஒக்.12

குடாநாட்டில் பயன்படுத்தப்படாமல் உள்ள மற்றும் வேலைகள் பூர்த்தியடையாத நிலையில் கைவிடப்பட்டுள்ள அரசாங்க, பொதுக் கட்டடங்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சகல பிரதேச செயலர் ரீதியாக யாழ்.செயலகத்தினால் இந்த விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

(எ-10-86)

## தகவல் நுட்பப்பூங்கா இடம்மாறும்

யாழ். ஸ்ரான்லி வீதியில் இயங்கி வரும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா இம்மாத இறுதியில் இருந்து யாழ். செயலகத்துக்கு அருகில் உள்ள கட்டடத்தில் இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-10-16)

## கரம்பொன்துறையில் தங்குமடம்

ஊர்காவற்றுறை, கரம்பொன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் 6 லட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் பயணிகள் தங்குமடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் இதற்கான ஆரம்பகட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

(எ-10-16)

## மண்கும்பான் பாடசாலையில் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

மண்கும்பான் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்க விசேட பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடாசலை வளர்ச்சி தொடர்பான இக்கூட்டத்திற்குப் பழைய மாணவர்கள், பெற்றோர், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

(எ-15)



சர்வதேச லயன்ஸ் கழகத்தின் பிரதேச தலைவர் லயன் டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட கண் பார்வை குறைபாடு உள்ள நோயாளர்களுக்கென 150 மூக்குக்கண்ணாடிகளை யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ரவிராஜ் முன்னிலையில் கண்சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.குகதாசனிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம் இது. (எ-139)



## வாழும் கலைக்கு ஆழம் தந்த அழகு!

கற்பக வல்லி நின்
பொற்பதம் தந்த
அற்புத கீதம்
அனைந்து கொண்டது!
தமிழர் நெஞ்சினில்
கமழும் தங்கச்
சிமிழின் சிகரம்
சிரம் சாய்ந்து
கொண்டது!
இவன்....
சொற்களின் பரவலை
கற்பனைக் கருக்களால்
அற்புத ஆட்சி செய்த
விற்பன்ன அரசு!
நடன வித்தகத்தின்
கடின வித்தைகளை
படிமமாக்கிய வடிவம்!
மேன கர்த்தாக்களின்
தாளம் செப்பியே
வாழும் கலைக்கு
ஆழம் தந்த அழகு!

கவியின் க(ர)வத்தால்
குவிக்கும் அர்ச்சனை
புவியில் படைத்திட்ட
செவிப்புலச் செம்மல்!
இளமைத் துடிப்பும்
புலமைப் புலர்வும்
தலைமை கொள்ளும்
பழைமைத் துள்ளல்!
அன்பால் அறிவால்
இன்ப உறவால்
துன்பம் துடைக்கும்
பண்பு வள்ளல்!
அளாவிடும் போதும்
அழகியல் பேசும்
உளவியல் தெரிந்த
ஊற்று!
இனியும் இவனின்
இசையின் வடிவம்
திசைகள் முழங்கும்....
அசைவின் ஆடல்
விசையாய் இயங்கும்
அதுவரை
ஈரவிழிகளின்
பார நினைவினில்
வீரமணிகளின்
ஓசை சேரும்.....

("முத்தமிழ் கலாநிதி" பிரம்மஸ்ரீ மா.த. ந.வீரமணிஐயர் நினைவுகளோடு....)

\- மானியூர் ரட்ணேஸ்.

# மன அழுத்தங்களில் இருந்து விடுதலைபெற முயல்வோம்!

"மனத்தளர்ச்சியுற்றவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள், வலுவற்றோர்க்கு உதவுங்கள், எல்லோரோடும் பொறுமையாயிருங்கள்....." (தெசலோ 5:14)

எமது வாழ்வியலை நகர்த்திச் செல்கின்றபோது பல்வேறுபட்ட நெருக்கீடுகளுக்கு உட்படுகின்றோம். எனினும், இவற்றைக் கண்டு மனம் சோர்ந்து வலுவற்றுப் போகாது, எதிர் கொண்டு வாழ வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

**யாழ்.ராதவல்லி**

நாம் எதிர்பார்ப்பது கிடைக்காமலும் மற்றவர்களினால் வஞ்சிக்கப்பட்டு இருப்பதும் எம்மை அதிகமாகப் பாதிக்கின்றது. இவற்றைத் தாங்க முடியாமல் அநேகர் தற்கொலைகூட செய்துகொள்ளுகின்றனர். காதலித்தவர் ஏமாற்றிவிட்டார் என்றும், படித்தது சோதனைக்கு வரவில்லை என்றும் நல்லவாழ்க்கை அமையவில்லை என்றும் சிலர் சோர்ந்து தமக்குள்ளே வருந்திக்கொள்ளுகின்றனர்.

வாழ்க்கை பல எதிர்பார்ப்பு நிறைந்தது. ஆனால், அத்தனை எதிர்பார்ப்பும் நிறைவேறும் என்பது முடியாத காரியம். ஆகவே, இருப்

**ஞாயிறு நற்பிரசாதம்**

பதில் திருப்தி கொண்டு வாழ்வை நகர்த்திச் சென்றால் மனநெருக்கீடுகளையும் அழுத்தங்களையும் குறைக்கலாம்.

மனச்சோர்வுகள் வருகின்றபோது அது பல உடல் - உள நோய்களை உண்டுபண்ணும் ஆகையினால், புனித பேதுரு சொல்வதுபோல "உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டுவிடுங்கள்" (1 பேதுரு 5-7)

"உன் வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு. அவரையே நம்பியிரு. அவரே உன் சார்பில் செயலாற்றுவார்" (திருப்பாடல் 37:5). இத்தகைய நம்பிக்கையூட்டுகின்ற திருமறை வாசகத்துக்கு ஏற்ப வாழுகின்றபோது உளநெருக்கீடுகள் குறைகின்றன, வாழ்வும் ஆரோக்கியமாக மலர்கின்றது.

நெருக்கீடுகளையும் துன்பங்களையும் நாமே நமக்கு வரவழைத்துக் கொள்ளுகின்றோம். ஏனெனில் எமக்குத் தேவையில்லாத, பொருத்தமில்லாத விடயங்கள் குறித்து, நாம் அதிகமாகக் கவலை கொள்ளுகின்றோம். இதனால், மகிழ்ச்சி வாழ்வை இழக்க நேரிடுகின்றது. அத்துடன், மற்றவர் மகிழ்ச்சியில் பொறாமை கொண்டு அவர்களை மறையான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றோம். எமது குறை நிறைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தயங்குகின்றோம். இதனால், யாருடனும் நட்பு கொள்ளாது முரண்பட்டு வாழ்கின்ற அவலநிலை ஏற்படுகின்றது.

எப்போதும் நாம் எமக்கு நம்பிக்கையூட்டும் எண்ணங்களை வளர்த்துக்கொள்ளவேண்டும். மறையான எண்ணங்கள் எம்மை இன்னும் துன்பத்தில் ஆழ்த்துகின்றன. 'நல்லதே நடக்கும்' என்ற உறுதியான நம்பிக்கையுடன் வாழ்வியலை நகர்த்த வேண்டும். இந்த எண்ணங்கள் மன அழுத்தங்களில் இருந்து விடுதலையைக் கொடுக்கின்றன.

*


THE ROYAL COLLEGE OF JAFFNA

(O/L) வரை பயிற்சி கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் உடன் தேவை.
தொடர்பு:- தலைமை ஆசிரியர்
விக்னேஸ்வரன் ஆச்சாரி
426 (302), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(23567) (29-16-17-31)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் செல்வி அ.கனகரத்தினம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் கலந்துகொள்வார். (எ-10-70)

*யாழ் நகர மக்களே!*
நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர்
இப்போது மீண்டும் பிரதான வீதியில்!

கண்பரிசோதனையும் பல்கட்டும் இடமும்

கண்பார்வை மங்கிவிட்டதா?
பற்கள் ஈடாடுகின்றனவா? கவலையை விடுங்கள்!
உடனே விஜயஞ் செய்யுங்கள்:

**P.J.பர்னாண்டோ**

- பல்கட்டுமிடமும் கண்ணாடியகமும் -
131, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

- ★ கண்கள் பரிசோதிக்கப்பட்டு கண்ணாடி வழங்கப்படும்.
- ★ அழகான முத்துப்போன்ற உறுதிமிக்க வெண்பற்கள் கட்டுதல்.
- ★ மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடுதல்.
- ★ முக அழகிற்கேற்ற அழகிய பிறேம்கள்.
- ★ கவர்ச்சியான, உறுதியான சங்குப்பற்கள்.

உரிமையாளர்:
ஜயன் A.சிஜயக்குமாரன்.

தலைமையகம் :
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-30662) (31-16-17)

கே.சீ.சீ.சீ. விளையாட்டுக் கழகம்
**கமலநாதன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டி**



அமரர்
**ஆறுமுகம் கமலநாதன்**
(முன்னாள் வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர்)
ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் அனுசரணையுடன் எம்மால் நடத்தப்படும் 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி

பிரதம விருந்தினர்
**திரு. S. புண்ணியசீலன்**
(அதிபர், யூனியன் கல்லூரி)

இடம்: கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானம்
காலம்: 12.10.2003 ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு
குறிப்பு: மூன்றாம் இடத்துக்கான போட்டியில்
கே.சீ.சீ.சீ. ஏ அணி எதிர் கே.சீ.சீ.சீ. பி அணி.
இறுதிப்போட்டியில் :
சென்றலைற் சோக்ஸ் அணி எதிர் ஜங்ஸ்ரார் அணி.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(23533) (16-17-31) சுற்றுப் போட்டிக்குழு.

## எட்டாவது பிறந்தநாள் நினைவு



கோண்டாவிலைச் சேர்ந்த
திரு.திருமதி
வைகுந்தநாதன் ரஞ்சினி
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்
செல்வன்
**வை.அர்ஜன்**
(கொக்குவில்
இந்து ஆரம்ப பாடசாலை தரம் – 02
(2002இல்
யாழ். கல்வி நிலையம் –
ஆறுகால்மடம் – தரம் 2)

**12.10.2003**

என்றும்
உங்கள் பாசமுள்ள:
அண்ணன் சுபநாதன்,
மற்றும் உறவுகள்.

பொன்னையா லேன்,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(23542) 11.18)

## முன்பள்ளி விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.12

ஆனைக்கோட்டை ஐக்கிய சன சமூக நிலைய அடைக்கலநாயகி முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய மைதானத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் யோ. யோண் சிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-185)

★ ★ ★

கரவெட்டி,ஒக்.12

கரவெட்டி மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு திருமதி த. ஜெயபாலன் தலைமையில் கரணவாய் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக மக்கள் வங்கியின் நெல்லியடிக் கிளை முகாமையாளர் திருமதி எம்.ஏ.எஸ். சிவலிங்கமும் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா, மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏவ்ணா ஆகியோரும் கலந்துகொள்வர். (எ-10-70)

**விற்பனைக்கு**

அதிநவீன முறையில் பார்மஸி மற்றும் புடைவை விற்பனைக்கு உகந்த தேவையான அலுமினிய FITTINGS SHOWCASES, COUNTERS விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
060 2213313
அல்லது
இரவு 8.00 மணிக்குப் பின்னர்
077 6103210 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
(C/30663)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நவரத்தினம் புவனேஸ்வரி

கைதடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் புவனேஸ்வரி நேற்று (11.10.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - சின்னம்மாவின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் தேவமனோகரி (லீலா) அவர்களின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான அருளம்மா, மனோன்மணி, நாகேஸ்வரி மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தர்மகுலராஜா, சுபாஜினி (ஜேர்மன்), சுதர்சனா, செல்லக்காந்தன், ஜனனி ஆகியோரின் பேர்த்தியும் மோனிசன், தர்சகன், ஸுஜான்சன் ஆகியோரின் அன்பு நிறைந்த பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகநாதன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
சு.தேவமனோகரி
(லீலா - மகள்).

(23568) (26-16-17-31)

## திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா

எழுதுமட்டுவாழ் தெற்கை (சிவன் கோவிலடி) சொந்த இடமாகவும் வீரபத்திரர் கோயிலடி புலோலி தெற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை இராசம்மா (சின்னத்துரை) அவர்கள் நேற்று (11.10.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சி.வேலுப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் சிவானந்தம் (லண்டன்), இராசகுமாரி, விஜயகுமாரி, நிர்மலாதேவி, சறோஜினி (சுவிஸ்), சிலோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும் சத்தியநாதன், தர்மலிங்கம், பத்மநாதன், பாலறஞ்சன், பராசக்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் அருட்பிரகாசம் மேரி அக்கினேஸ், மருதங்கேணியைச் சேர்ந்த சடையர் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2003) ஞாயிறு பி.ப.2.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிரந்தர முகவரி:*
*சிவன் கோவில் வீதி,*
*எழுதுமட்டுவாழ் தெற்கு.*
*தற்காலிக முகவரி:*
*வீரபத்திரர் கோயிலடி,*
*புலோலி தெற்கு.*

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

(C/30665) (29-16-17-31)

**நிலவு.COM இன் தமிழ் கணினி 2003**
யாழ். மண்ணில்
மாபெரும் கணினிக் கண்காட்சியும் கருத்தரங்கும்.
அனுசரணை
NIIT | IT Island | கம்ப்யூட்டர் Info
ஊடக அனுசரணை : உதயன்
(சி-30661)(31-16-17)

## சாவகச்சேரி நகரசபை

### 2004ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01.01.2004ஆம் திகதி தொடக்கம் 31.12.2004 வரையான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம் / வேலைகளுக்கான கேள்விகள் உரிய கட்டணங்களை இவ்வலுவலகத்தில் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் பத்திரங்களில் பூர்த்தி செய்யப்பட்ட இணைப்பிரதிகள் 30.10.2003ஆம் திகதி காலை 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ. வியாபாரம்

| விவரம் | கடை இல. | ஆகக் குறைந்த கேள்வித்தொகை ரூ.ச. | கேள்விவைப்பு ரூ.ச. | படிவக்கட்டணம் (மீளளிக்கப்படமாட்டாது) ரூ.ச. |
|---|---|---|---|---|
| 1. ஆட்டிறைச்சிக் கடை | என்எம்எஸ் 1 | 100000.00 | 1000.00 | 200.00 பெறுமதிசேர் வரி 20% |
| 2. ஆட்டிறைச்சிக் கடை | என்எம்எஸ் 2 | 100000.00 | 1000.00 | 200.00 " |
| 3. மாட்டிறைச்சிக் கடை | என்எம்எஸ் 3 | 150000.00 | 1000.00 | 200.00 " |
| 4. மாட்டிறைச்சிக் கடை | என்எம்எஸ் 4 | 150000.00 | 1000.00 | 200.00 " |

ஆ. சேவைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| குப்பை கூளங்களை அகற்றுதல் உழவு இயந்திரம் பெட்டியுட்பட வாடகைக்கு விடுதல் நாள் ஒன்றுக்கு | | – – | 1000.00 | 200.00 " |

கேள்விப் பத்திரங்கள் 29.10.2003ஆம் திகதி நண்பகல் 12.30 மணிவரை வழங்கப்படும்.
குறித்த திகதிக்குப் பின்னர் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.
ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் உடன்படிக்கையின் கைச்சாத்திட்ட பின்னர் கேள்விவைப்புப் பணம் மீளளிக்கப்படும்.
கேள்வித் தொகையுடன் பெறுமதி சேர் வரி 20%ம் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும்.
மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி,*
*10.10.2003.*

மு.செ.சரவணபவ,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

(சி-30653) (31-16-17)

# போதனா வைத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார நிலைமைகள் எவ்வாறு உள்ளன என்பதை புகைப்படங்களை ஆதாரமாகக் கொண்டு தெளிவாக விளக்கிய அவர், அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார வசதிகளைப் பேணும் விடயத்தில் வைத்தியசாலைகள் முன்னிலையில் இருக்கவேண்டும். ஆனால் யாழ். போதன வைத்தியசாலையில் அப்படியில்லை. வைத்தியசாலையில் இருந்து பெறப்படும் கழிவுகள், கடதாசிகள், உணவு எச்சங்கள் என்பன வேறாகவும் பழுதடைந்த கையுறைகள், மருந்தேற்றும் 'ஸ்றிஞ்சுகள்', பன்டேஜ், குளுக்கோஸ் வெற்றுப் போத்தல்கள் என்பன வேறாகவும், பிரசவத்தின்போது அகற்றப்படும் தொப்புள் கொடி மற்றும் ஏனைய மனித எச்சங்கள் வேறாகவும் சேகரிக்கப்பட்டு அவை தகுந்த முறையில் அகற்றப்படவேண்டும்.

இவற்றைச் சேகரிப்பதற்கென தனித்தனி நிறங்களில் அமைந்த குப்பைத்தொட்டிகளும் உள்ளன. ஆனால், அவற்றை நான் யாழ் ஆஸ்பத்திரியில் காணவில்லை. இங்கு எல்லாக் கழிவுகளும் ஒன்றாகச் சேகரிக்கப்பட்டு வைத்தியசாலை வளவுக்குள்ளேயே தகுதியற்ற இடம் ஒன்றில் கொட்டப்படுகிறது.

இந்த இடம் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் திறந்த வெளியாக உள்ளது. தாதியர்களின் சமையல் அறையும் இதற்கு மிக அண்மையில் உள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க நாம் நோய்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்று கேள்வி எழுப்பினார்.

அவை தொடர்பான புகைப்படங்களையும் புரொஜெக்டர் மூலம் அவர் காண்பித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையின் இந்த நிலையைக் கண்டு இப்பயிற்சிப் பட்டறையில் இருந்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

"யாழ். மாநகர சபை நாளொன்றுககு 49 மெற்றிக்தொன் கழிவுகளைச் சேகரிக்கின்றது. இதற்கு என்ன நடக்கிறது?

காக்கைதீவிலே இவை கண்டபடி கொட்டப்படுகின்றன. காகங்களுக்குத் தான் கொண்டாட்டம்" என்று நகைச்சுவையாகத் தெரிவித்தார் டாக்டர் என்.சிவராஜா.

நேற்றுக் காலை முதல் மாலை வரை நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் மீள்குடியமர்வும், வாழ்க்கைக்கான உதவிகளும், புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பான வியூகங்கள், உளநலப்புனர்வாழ்வு, கண்ணிவெடிய கற்றல், மனிதவள அபிவிருத்தி, சிறுவர் - வலுவிழந்தோர் - பெண்கள் புனர்வாழ்வு, கிராமிய அமைப்புக்களின் திறன் விருத்தி, விவசாயம் - கால்நடை, மீன்பிடி, கல்வி, சுகாதாரம், நீர் முகாமைத்துவம், வீதியமைப்பு, வீடமைப்பு, தொழில்சார் பயிற்சி ஆகிய தலைப்புக்களில் துறைசார் நிபுணர்கள் கருத்துரைகளை வழங்கினார்கள். (ம-8)

# இராணுவம் வேண்டுமென்றே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இராணுவத்தால் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பாக ஏற்கனவே பல தடவை எமது வருத்தத்தினையும் கண்டனத்தையும் தெரிவித்திருந்த போதும் படைத்தரப்பு நிலைமையை மேலும் மேலும் மோசமாக்கும் நிலைப்பாட்டையே எடுத்துவருகிறது.

மடத்தடிச்சந்தி, கச்சாய், நாவாந்துறை, நெல்லியடி என தொடர் விபத்துக்களால் மக்கள் பாதிப்புற்று வருகின்றனர். இராணுவத்தின் தவறைச் சுட்டிக்காட்ட முனையும் போது கண்ணீர்ப்புகைகுண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடு, தடியடி என மக்கள் தாக்கி அச்சுறுத்தப்படுகின்றனர்.

மேற்கூறியவாறான சம்பவங்கள் வீதியில் நடமாடும் மக்களின் சுதந்திரத்தை பறிப்பதாகவே உள்ளது. தமது தெருக்களில் அன்றாட அலுவல்களை நிம்மதியாக அச்சமின்றி ஆற்ற முடியாத மக்கள் தமது உரிமைக்காக கொந்தளிப்பதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

பாதிப்படைந்த மக்கள் மேலும் பாதிப்புகள் தொடரக்கூடாது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் ஏதுமின்றி ஒன்றுதிரண்டு தம்மாலியன்ற எதிர்ப்புக்களைக் காட்டுகிறார்கள். மக்கள் உணர்ச்சி மேலீட்டாலும் பாதிப்புக்களால் ஏற்பட்ட உள்ளக்கொதிப்பாலும் தமது எதிர்பை அவர்கள் வலுவாக காட்டுகின்றனர். பாதிப்பை உண்டு பண்ணியோரையும், அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவோரையும் நேரடியாக தாக்க முற்படுகின்றனர்.

இவ்விடயத்தில் படைத்தரப்பு மக்களின் கொதிப்பை மேலும் கிளரும் விதமாக ஆயுதப் பிரயோகம், தடியடி, கண்ணீர்புகை தாக்குதல் என்பவற்றை மேற்கொள்கிறது. பெரிய அளவில் படையினரை அப்பிரதேசத்தில் குவித்து அப்பிரதேசத்தை இராணுவமயமாக்குவதும் புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் செயலே. அத்தோடு மக்களின் நடமாட்டத்தை முடக்கும் மோசமான மனித உரிமை மீறலும் இதுவாகும்.

மேலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை மனித உரிமை ஆணைக்குழுவும், போர்நிறுத்த கண்காணிப்புகுழுவும் மக்களுக்கு உறுதிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (ம-3)

## தவறிவிட்டது

ஹைஏஸ் வானுக்குரிய திறப்பு (குரங்கு வடிவிலான இணைப்புடன்) ஸ்ரான்லி வீதிக்கும் மானிப்பாய் வீதிக்கும் இடையில் 11.10.2003 சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அற்புதா ரேடிங் கொம்பனி, 191, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (23583)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய் வீதியில் (ஐந்து சந்தி) அமைந்துள்ள 1 3/8 பரப்புள்ள வீடு விற்பனைக்கு உண்டு. (தரகர் வேண்டாம்)

தொடர்புகளுக்கு:
(23584) 01-2714747

## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்கள உத்தியோகத்தர் கந்தசாமி அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **வேலாயுதபிள்ளை தங்கம்மா**

காலமானதையிட்டு ஆழ்ந்த துயருறுவதோடு, அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்.

*உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்.*

(23580)(16-13-31)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பனும் சக ஊழியனுமான

**திருமா கலிஸ்ரஸ் அவர்களின்** அன்புத் தந்தையார்

அமரர் **சூசைப்பிள்ளை மார்க்கு**

(கௌரி கபே உரிமையாளர் - பீச்றோட், குருநகர் - தங்கம்)

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
மக்கள் வங்கி, பிரதான வீதி கிளை.

*யாழ்ப்பாணம்.*

(23579)(16-13-31)

## இறுதியாட்டம்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகத்தால், ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

காலையில் இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி.'ஏ'அணியும் கே.ஸி.ஸி.ஸி.'பி' அணியும் மோதுகின்றன.

பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் 'சொக்ஸ்' அணியும் ஜங்ஸ்ரார் அணியும் மோதவுள்ளன.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் எஸ்.புண்ணியசீலன் இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-3)

## கமநல நிலையத்துக்கு காரைநகரில் அடிக்கல்

காரைநகர்,ஒக்.12

காரைநகருக்கென்று தனியானதொரு கமநலசேவை நிலையம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

இந்த கமநல சேவை நிலைய கட்டடத்திற்கான அடிக்கல்லை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நட்டுவைத்தார்.

இந்த அடிக்கல் நாட்டு விழா காரைநகர் வடக்கு விவசாய சம்மேளனத் தலைவர் வே. சிற்சபேசன் தலைமையில் நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்றது.

இந்த விழாவில் விவசாய கால்நடை அமைச்சின் செயலாளர் தனுசேன கெட்டிஆராச்சி, கமநல சேவை திணைக்கள ஆணையாளர் லூக்கல் இந்துருக்கல்ல மற்றும் கொப்பேக்கடுவ விவசாய ஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர் எஸ்.சொய்சா ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-73)

## கனேடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14ஆம் திகதி கொழும்பு வரும் கனேடிய அமைச்சர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்களுடன பேச்சுக்களை நடத்துவார். 16ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும அவர் அரச அதிபர் உட்படப் பலரைச் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன் செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நடத்துவார்.

இலங்கை வருவதற்கு முன் அவர் இந்தியாவுக்கும் செல்கின்றார். அங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் உட்பட பலருடனும் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கையில் தற்சமயம் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து கனேடிய அமைச்சர் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

"இலங்கை இனப் போருக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்று மூலமே முடிவு காணலாம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாக அவர்களின் கருத்தை அறிய விரும்புகிறேன்" என்று கனேடிய அமைச்சர் கருத்து வெளியிட்டுள்ளார். (ம-3)


ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த். கிரண் வடிவேல். நம்பியார் நடிப்பில்



காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)

நாகம்ஸ் சுன்னாகம்



விக்ரம், திரிஷா, விவேக் நடித்த

சாமி (ரீல்ஸ்)

13.10.2003 முதல் ராமச்சந்திரா

நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், ஜோதிகா, விவேக்

தூள் (ரீல்ஸ்)

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு ஜக்கிஜான் நடித்த சாகசப்படம்

TUXEDO

லஷ்சுமி சினிமா இணுவில்

பிரசாந்த், ஷாலினி, வையாபுரி நடித்த

பிரியாத வரம் வேண்டும் (ரீல்ஸ்)

காட்சி நேரம் 11.00, 3.00, 7.00 (பி.நே)


## கௌரவிப்பு

கரவெட்டி,ஒக்.12

சமாதான நீதிவான்களாக நியமனம் செய்யப்பட்ட பொலிகண்டி சமரபாகுவைச் சேர்ந்த உபதபால அதிபர் த.கணேசன், ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர் மா.விஜயரத்தினம் ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.தயா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் வடமராட்சிப் பிரதேச அமைப்பாளர் எஸ்.அரவிந்தன் ஆகியோர் இதில் உரை நிகழ்த்துவர். (எ-70)

## இறுதி நாள் நிகழ்வுகள்

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் பவளவிழாவின் 3ஆம் நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் கலாநிதி க.குணராஜா தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே. சிவாஜிலிங்கம், முன்னாள் விரிவுரையாளர் கே.சிவசுப்பிரமணியம், வைத்திய கலாநிதி பு.உரோமகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-30-135)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வேலாயுதபிள்ளை தங்கம்மா

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை தங்கம்மா அவர்கள் நேற்று (11.10.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் கதிர்காமநாதன், கந்தசாமி (CDO, உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்), நாகேஸ்வரி, ஈஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீலதா, சந்திரிகா, நடனபாதம் (அதிபர், தோப்பு அருள்நந்தி வித்தியாலயம்), செல்வராசா ஆகியோரின் மாமியாரும் ரேணுகா, பிரணவன், பிரதாபன், குகதர்சினி, பதுர்ஷா, சாருகேசி, சாருஜன், சாரங்கி, நேசன்- சுவேந்திரா, சதானந்தன், துஷித்தா, துஷ்யந்தி, துஷ்யந்தன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2003) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
வே.கந்தசாமி (மகன்).

*நீர்வேலி தெற்கு.*
*நீர்வேலி.*

(23578)(13-16-31)

## சின்னத்துரை கந்தசாமி

மட்டுவில் வடக்கு, முத்துமாரி அம்மன் கோயில் ஒழுங்கை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கந்தசாமி 10.10.2003 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*8/35, ஸ்ரீசித்தாத்த வீதி,*
*கிருலப்பனை,*
*கொழும்பு.*
தொலைபேசி: 01-2512403

தகவல்:
திருமதி விசாலாட்சி
(மனைவி).

(23577) (29-16-17-31)

## துரையப்பா ஞானசேகரம்

(லைற் இஞ்சின் ஞானம் - சுன்னாகம்)

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா ஞானசேகரம் 06.10.2003 திங்கட்கிழமை கனடாவில் (ரொறன்ரோ) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2003 வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூராவத்தை, சுன்னாகம்.*
*கனடா, T.P: 416-1942955.*

தகவல்:
சகோதரர்கள்.

(23572)(16-17-31)

## சம்பந்தர் இராசேந்திரம்

(சம்பந்தர், யாழ் மாநகர சபை சந்தை மேற்பார்வையாளர்.)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கட்டைப்பிராயை வசிப்பிடமாகக் கொண்ட சம்பந்தர் இராசேந்திரம் (யாழ். மாநகரசபை மேற்பார்வையாளர்) அவர்கள் நேற்று (11.10.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக் கணவரும் இந்திராணியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் (கிராம சேவையாளர்) அவர்களின் பாசமிகு மாமனாரும் இராசலிங்கம் அவர்களின் அன்பு மைத்துனரும் கஜன், கஜனா, கஜிபன், கவீந்திரன், கஜாஜெனியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2003) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*3ஆம் கட்டை,*
*கட்டைப்பிராய், யாழ்ப்பாணம்.*

தகவல்:
த.இந்திராணி (மகள்).

(23582)(16-17-31)

## சூசைப்பிள்ளை மார்க்கு (தங்கம்)

(கௌரி கபே உரிமையாளர், பீச்றோட், குருநகர்)

இல.41, புதிய பூங்கா வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை மார்க்கு (தங்கம்) அவர்கள் நேற்று (11.10.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - மாகிறேற் தம்பதிகளின் அன்பு மகனும் மேரி இம்மாக்கு லேற்றா (வவா)வின் அன்புக் கணவரும் ஜொய்சி (இத்தாலி), கௌரி, இளங்கீரன், கலிஸ்ரஸ (மக்கள் வங்கி, பிரதான வீதிக்கிளை), ஜோர்ஜ்கெனடி (மாணவன், உயர் தொழில்நுட்பக் கல்லூரி) ஆகியோரின் தகப்பனாரும் அகிலன் (இத்தாலி), கிறிஸ்ரியன் (ஆசிரியர், சென்.பற்றிக்ஸ் கல்லூரி), றொமில்டா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற ஞானேந்திரன் மற்றும் குணம் தம்பதிகளின் மருமகனும் மிதுன், பிரியங்கா, ஷரோணி ஆகியோரின் அன்புப் பேரனும் செபஸ்ரியன் (நோர்வே), மணி, சின்னன், யோகம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற விஜயன் மற்றும் கிளி, ராஜன், நியூட்டன், வனிதா, குமரன், தங்கமணி, மிலி, மங்களேஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நல்லடக்கத்திற்காக நாளை (13.10.2003) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.41, புதிய பூங்கா வீதி,*
*குருநகர்.*

தகவல்:
மா.இளங்கீரன் (மகன்),
சை.கிறிஸ்ரியன் (மருமகன்).

(23586) (29-16-17-31)





**நேற்று அரியாலை மாம்பழம் சந்தி அருகே இடம்பெற்ற விபத்தில் இராணுவத்தினரின் பவள் கவசவாகனம் மோதி உருக்குலைந்து போய்க்கிடக்கும் ஓட்டோவையும் இந்தச் சம்பவம் பற்றி விசாரிக்கச் சென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வாகனம் ஒன்று அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.**

## வடமராட்சி கிழக்கில் பொதுமக்களால் வீதிகள் அமைப்பு

தென்மராட்சி,ஒக்.12

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இரு புதிய வீதிகள் அப்பகுதி பொது மக்களால் அமைக்கப்பட்டு வருகின்றன.

உடுத்துறையிலிருந்து ஆழியவளைக்கு இரண்டு கிலோமீற்றர் நீளத்திலும் உடுத்துறை ஊடாக மருதங்கேணிக்குச் செல்லும் வீதியும் புதிதாக அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் இவ்வீதிகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

# கடற்படையினர் தாக்கி மாதகலில் பெண் காயம்!

மாதகல்,ஒக்.12

மாதகல் புக்கபிலோ பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் தமது வீட்டு வாசலில் இருந்த பெண் ஒருவர் கடற்படையினரால் தாக்கபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர் தற்போது சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரவில் சிவில் உடையில் வந்த இரு கடற்படைச் சிப்பாய்கள் அந்தப் பெண்ணை தூக்கிச் செல்ல முயன்றனர் என்றும் -

ஊர்மக்கள் கூடியதால் அவ்விரு சிப்பாய்களும் பெண்ணைத் தாக்கி விட்டு தப்பிவிட்டனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் மாதகல் கடற்படை அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து, உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பெண்ணின் வீட்டை நேற்றுப் பார்வையிட்டனர்.

(ம-3-95)

## வலி.வடக்கில் கலாசார விழா

தெல்லிப்பழை,ஒக்.12

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் இம்மாத இறுதியில் கலாசார விழா நடைபெறவுள்ளது.

3 நாள்கள் நடைபெறவுள்ள இந்த விழாவில் அளவெட்டி, பன்னாலை மற்றும் இளவாலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பங்குகொள்ளவுள்ளனர்.

(எ-10-150)

# பொதுமக்கள் - படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விபத்தை அடுத்து அப்பகுதியில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடினர். வீதியின் இரு பங்கங்களிலும் தடைகளை ஏற்படுத்தி போக்குவரத்தை அவர்கள் தடைசெய்தனர். விபத்தில் சம்பந்தப்பட்ட கவசவாகனத்தை அங்கிருந்து அகற்றுவதற்கும் அவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சிறிதுநேரத்தில் அங்கு போக்குவரத்துப் பொலீஸார் வந்து சேர்ந்தனர். பொதுமக்கள் பொலீஸாருடனும் இராணுவத்தினருடனும் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

நேரம் ஆக ஆக அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலீஸாரும் மேலும் மேலும் குவிக்கப்பட்டனர்.

சம்பவம் குறித்துக் கேள்வியுள்ள கண்காணிப்புக் குழுவினரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

அங்கு நிலைமைகளை அவதானித்த கண்காணிப்புக்குழு அதிகாரிகள் பொதுமக்களுடனும் இராணுவ மற்றும் பொலீஸ் அதிகாரிகளுடனும் கலந்துரையாடினர்.

சம்பவ இடத்துக்கு நீதிவான் வந்து பார்வையிட்ட பின்னரே பவள் கவச வாகனத்தை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தினர்.

பொதுமக்களின் இந்த நிலைப்பாடு தொடர்பாக கண்காணிப்புக் குழு அதிகாரிகள் படை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினர்.

ஆனால், அங்கு நின்ற 514ஆவது பிரிகேட் படைப்பிரிவின் அதிகாரி மேஜர் செனரத் இது ஒரு சாதாரண விபத்து என்பதால் விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பது பொலீஸாரின் கடமை என்று கண்காணிப்புக் குழு அதிகாரிகளிடம் கூறினார்.

ஆனால், கண்காணிப்புக்குழு அதிகாரிகள் அதனை ஏற்க மறுத்து விட்டனர். "விபத்து சிறிது என்கிறீர்களே. அதன் சேதம் இவ்வளவு பெரிதாக இருக்கிறதே?" என்று கண்காணிப்புக் குழு அதிகாரி ஒருவர் படை அதிகாரியைப் பார்த்துக் கேட்டார். இதனையடுத்து இருதரப்புக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் உச்சக்கட்டத்தை அடைந்தபோது "இது ஒரு விபத்து இதில் நடவடிக்கை எடுக்கவேண்டியது பொலீஸாரின் பொறுப்பு. எனவே நீங்கள் இதில் தலையிட வேண்டாம்" என்று படை அதிகாரி கண்காணிப்புக்குழு அதிகாரிகளிடம் உரத்த குரலில் கூறினார்.

இதில் பொதுமக்கள் சம்பந்தப்பட்டிருப்பதாலும் இங்கு கலவரம் ஏற்படும் நிலை காணப்படுவதாலும் தாம் தலையிடவேண்டியது அவசியம் என்று கண்காணிப்புக்குழு அதிகாரி சுட்டிக் காட்டினார்.

இந்த வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென நூற்றுக் கணக்கான இராணுவத்தினரும் கலகம் அடக்கும் பொலீஸாரும் அவ்விடத்தில் குவிக்கப்பட்டனர்.

இராணுவத்தினருடனான பேச்சுக்கள் வெற்றியளிக்காத நிலையில் கண்காணிப்புக்குழுவினர் அங்கிருந்து புறப்பட ஆயத்தமாகினர். அவர்களைத் தடுத்து நிறுத்த பொதுமக்கள் பிரயத்தனம் செய்தனர்.

நிலைமை மோசமாகியதைத் தொடர்ந்து கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளை இராணுவத்தினர் அருகிலிருந்த வீடு ஒன்றினுள் அழைத்துச் சென்றனர்.

இராணுவத்தினரின் இத்தகைய நடவடிக்கையால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொலீஸார் மற்றும் இராணுவத்தினரை நோக்கி கல்லெறிய ஆரம்பித்தனர்.

உடனடியாக இராணுவத்தினரும் பொலீஸாரும் பொதுமக்களை அங்கிருந்து விரட்டுவதற்காக அவர்கள் மீது தாக்குதல்களை ஆரம்பித்தனர். கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டன. துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் சிதறி ஓடிய பொதுமக்களைத் துரத்தித் துரத்தித் தாக்கிய படையினர் அவர்களில் சிலரைப் பிடித்து வைத்துக் காடைத்தனமாகத் தாக்கினர்.

இராணுவத்தினரின் இத்தகைய மூர்க்கத்தனமான தாக்குதல்களினால் 6 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தக் களேபரத்துக்கு இடையே அங்கு நிறுத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் குழுவினரின் வாகனக் கண்ணாடியை சிப்பாய் ஒருவர் கொட்டனால் அடித்து நொறுக்கினார். அங்கு நின்ற எமது செய்தியாளர்கள் இந்தக் காட்சியை நேரில் கண்டனர்.

பொதுமக்களை விரட்டி விரட்டித் தாக்கிய படையினர் அப்பகுதியில் இருந்த கடைகளின் பெயர்ப் பலகைகள், ராக்கைகள் என்பவற்றையும் அடித்து துவம்சம் செய்தனர்.

இரவு 7 மணிவரையில் இந்தக் களேபரம் தொடர்ந்தது. இதற்கிடையில், பொதுமக்கள் விபத்து நடந்த இடத்தை விட்டு விரட்டப்பட்ட மறுகணம் பவள் கவச வாகனம் இராணுவத்தினரால் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது.

இந்தச் சம்பவங்களால் மாம்பழம் சந்திப் பகுதியில் நேற்றிரவு பதற்றம் காணப்பட்டது.

**காயமடைந்தவர்கள்**

படையினரால் தாக்கப்பட்டு காயமடைந்த 6 பேரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இ.இதயபவன் (வயது 21, வலம்புரி பத்திரிகைச் செய்தியாளர்), பா. டயனிகரன் (வயது 21 - அரியாலை), கா.சந்திரன் (வயது 21 - அரியாலை), ம.பகீரதன்(ஆசீர்வாதப்பா வீதி, அரியாலை), இ.இராமதீஸன் (வயது-23 - கனகரத்தினம் வீதி, அரியாலை), வெற்றி (வயது 24 - வன்னி) ஆகியோரே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தின் போது பொலீஸார் மற்றும் படையினர் மீது கல்லெறிந்தார்கள் என்று குற்றச்சாட்டின் பேரில் 10 பேரைத் தாம் கைதுசெய்து வைத்துள்ளனர் என யாழ். பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவத்தில் இரு பொலீஸார் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

(ம-4-6-ரி)

## பத்திரிகையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதைக் கண்டித்து நடக்கும் இன்றைய போராட்டத்தில் குடாநாட்டுச் செய்தியாளர்கள் பங்கேற்கவிருக்கின்றனர்.

இந்தப் போராட்டத்தை யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

(ம-3)

## பத்திரிகையாளர் மீதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'உதயன்', 'யாழ் தினக்குரல்', 'வலம்புரி' பத்திரிகைகளின் செய்தியாளர்களும் புகைப்படக்காரர்களுமே கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

'வலம்புரி' பத்திரிகையின் செய்தியாளரான க.இதயபவன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது 'டிஜிட்டல்' புகைப்படக் கருவி படையினரால் பறிக்கப்பட்டு உடைத்தெறியப்பட்டுள்ளது.

ஏனைய செய்தியாளர்களும் புகைப்படப் பிடிப்பாளர்களும் இராணுவத்தினரின் கொட்டன் தாக்குதலுக்கு இலக்காகி உட்காயங்களுக்குள்ளாகினர்.

தாம் செய்தியாளர்கள் என்றும் கூறி அரச தகவல் திணைக்களத்தால் தமக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையினை காண்பித்தபோதும் இராணுவத்தினர் அவர்களை மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர். சிலரது அடையாள அட்டைகள் பறித்து கசக்கி வீசப்பட்டன.

தூஷண வார்த்தைகளால் மிக மோசமாகத் திட்டியபடியே இராணுவத்தினர் பத்திரியாளர்களைத் தாக்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ம-4)

# பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

அரியாலையில் நேற்று செய்தியாளர்கள் படையினரால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக எல்லைகள் கடந்த பத்திரிகையாளர் நிறுவனத்துகக்கு வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

செய்தியாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக 'பக்ஸ்' மூலம் இந்த முறைப்பாட்டை சங்கம் அனுப்பியுள்ளது.

இச்சம்பவத்தைக் கண்டித்து சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உதயன், வலம்புரி, தினக்குரல் பததிரிகைகளின் செய்தியாளர்களும் புகைப்படப்பிடிப்பாளர்களும் மீண்டும் இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளாகியிருப்பது வன்மையாகக் கண்டிக்கவேண்டிய விடயமாகும்.

செய்தி சேகரிப்பதற்காக நேற்றையதினம் அரியாலைப் பகுதிக்குச் சென்ற செய்தியாளர்கள் மீது பாதுகாப்புப் படையினர் வஞ்சகம் தீர்க்கும் நோக்குடனும் ஊடகவியலாளர்களை பயமுறுத்தி உண்மைகளை வெளிவராமல் தடுக்கும் நோக்குடனும் இந்த காடைத்தனமான தாக்குதல் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இத்தகையவர்களின் செயல்களை சமாதானந்தையும் நல்லுறவையும் விரும்பும் ஒவ்வொருவரும் கண்டிக்க எம்முடன் அணிதிரளும்படி வேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் இது முதல் முறையன்று. பத்திரிகைகளில் கண்டன அறிக்கைகளை விடுவதால் மட்டும் பாதுகாப்புப் படையினர் தமது வன்முறைகளை நிறுத்திக்கொள்ளப் போவதில்லை.

ஆகவே, இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாமல் இருக்க ஏற்ற நடவடிக்கைகளை ஊடகவியலாளர் மட்டுமல்ல, மக்கள் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் அனைவரும் எடுக்கவேண்டும். இராணுவத்தினரின் இத்தகைய செயல்களை அனைத்துத் தரப்பினரும் ஒன்றுதிரண்டு எதிர்க்கவேண்டும்.

- என்றுள்ளது.


**புதிய வீடியோ CD வெளியீடு**

ராகி (Ragan)

(பிரதிகளை உடன் பெறலாம்)

பிளாஷ் சீடி ஹவுஸ்

840, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் T.P: 0777-162349

**எமது புதிய வீடியோCD வெளியீடுகள்**

வின்னர்

ராகி

(பிரதிகள் உடன் பெறலாம்)

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

**NEW ARRIVAL**




STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P 021 222 2674, email: stpedu@sltnet.lk

**யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் புதிதாக அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்ளல்**

யாழ் இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் தங்கள் உறுப்புரிமையைப் பெற்று அங்கத்துவத்தை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

யாழ். இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

**NEW SCIENCE COLLEGE**

இணைந்த கணிதம்

பரீட்சைமாற்றம் சேர்மானம்

Mon, Thu 5.00-6.00 (p.m)

(பழைய நேரம்)

ஆரம்பம்: 13.10.2003

BY: P.செந்தில்நாதன் B.Sc.

**IIS**

புலமைப்பரிசில் திட்டம் 2004

கல்வியாண்டு 2004/2005இல் புலமைப்பரிசில் திட்டம் 2004இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயில விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி:15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

**வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி...!**

இன்றுமுதல் UR 60 Maxell-Green (பச்சை) ஓடியோ கசற்றினை மீளவும் எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

ராஜ் பிறதர்ஸ் எலெக்ரோனிக்.
75, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**தேவை**

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு காசாளர், கணக்காளர் (பெண்கள்) தேவை. தகைமைகள் க.பொ.த. உயர்தரத்துடன் கணனிசார் அறிவு விரும்பத்தக்கது.

நேரில் வரவும்:- 13.10.03 தொடக்கம் 18.10.03 வரை

நேரம்:- 10.00 மணி தொடக்கம் 4.00 மணிவரை

பாஸ்ட் ஸ்ரூடியோ அன கலர்லாப்.
382, பிரதான வீதி,
(சென்.யோன் கல்லூரி அருகில்)
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.